அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 19 | டிசம்பர் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



## கடனும் தற்கொலைகளும்!

## தீர்வு என்கிற மாயமான்

## பாடசாலை மாணவர்களின் இன்றைய நிலை

## கொள்ளை போகும் கடல் வளம்

## மலைகளை அசைக்கும் பெண்கள்!



# வெளிநாட்டு வாழ்வு!

கண்ணுக்கெட்டிய
தூரம் எல்லாம்
வெள்ளைப்
பூக் குவியலாய்
கொட்டிக் கிடந்தது பனி.
கொள்ளை அழகு!

மனமெல்லாம் சிலிர்த்து
மறுபடியும்
ஒரு குழந்தையாய் பிறந்து
‘பனி மனிதன்’ பிடிக்கும்
ஏக்கம் மனதில்!

அலாரத்தின் கூக்குரல்
நேரம் போனதை
உரக்கச் சொல்லியது.
ஆறிப்போன தேநீரில்
சுவை எதுவும் தெரியவில்லை!

இரண்டிரண்டாய் காலுறைகள்
மூன்றடுக்கு உடுப்பு
அதன்மேல்
தடித்த குளிர் அங்கி
கைகளில் கையுறை

அவசரமாக உடுத்தி
வாயிற்கதவைத் தாழிட.
என்பு வரை குளிர் புகுந்து
குத்திக் குதறும்!

மறுபடி கதவு திறந்து
வீட்டினுள் ஓடிவர
மனம் ஏங்கும்.!
ஊரில்..
மகன் அனுப்பும்
பணத்தை நம்பி
எட்டு உயிர்கள் காத்துக்கிடக்கும்
நினைப்பு வரும்..!!
பன்னிரண்டு மணித்தியாலம்
வேலை.. வேலை..
குளிரும் மழையும்
இங்கே குற்றமாகாது

இயந்திரத்தோடு இயந்திரமாக
இயங்கும் ஒரு வாழ்க்கை.
நாள் தொடங்குவதும்
முடிவடைவதும்
தெரியாது..

குளிரைப் போக்க என்று
பழகிய ‘பியர்’
தனிமையை மறக்க என்ற
சாக்குடன் தொடர்ந்து
இன்று
அது ஒரு அந்தஸ்து.

களைத்துச் சோர்ந்து வீடுவர
பூட்டிய கதவு வரவேற்கும்..!
தனித்தனியாக ஆக்கத் தோணாது
சோறும் கறியும்
ஒன்றாக அவியவிட்டு
பியருடன் உட்கார
அக்கடா என்றிருக்கும்..


அடுத்த நாளின்
அலாரத்தை வைக்கும்போது
அடுத்த விடியலுக்கு
சில மணித்துளிகளே இருக்கும்
அந்நிய தேச வாழ்க்கை.

அன்பு

மாத இதழ் | மணம்: 19
டிசம்பர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 03 |
| கொள்ளை போகும்... | 06 |
| தினேஷ் ஷாஃப்டருக்கு... | 09 |
| பிளவின் விளைவு... | 11 |
| கவிதையே உயிர் மூச்சாகிய).... | 12 |
| எப்ப நீ வரப்போறாய்? (கவிதை)... | 15 |
| மலைகளை அசைக்கும் .... | 16 |
| அசேரியா - பண்டைய.... | 18 |
| கடனும் தற்கொலைகளும்... | 21 |
| வரலாற்றை அறிவோம்... | 22 |
| ஊக்கமூட்டும் கதை.... | 24 |
| 'வெந்து தணிந்தது காடு'... | 25 |
| பார்த்தீனியம்- ... | 27 |
| சே குவேரா ... | 29 |
| வலை (நெடுங் கதை) ... | 32 |
| பனை; ... | 36 |

## திருக்குறள்

**குறள் 597:**

“சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு”

**விளக்க உரை:**

உடம்பை மறைக்குமளவு அம்புகளால் புண்பட்டும் யானைத் தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல், ஊக்கம் உடையவர் அழிவு வந்தவிடத்திலும் தளர மாட்டார்.















நீண்ட காலத்தின் பின் தாயகத்தில் நினைவேந்தல் சிறப்பாக நடைபெற்றதும், அதிகளவு மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியதும் ஓரளவுக்கு மனநிம்மதியைத் தந்தது.

மிகப் பொருத்தமான ஆசிரியர் பக்கம் தந்திருக்கிறீர்கள். நன்றி. குடியும், போதைவஸ்தும் தமிழினத்தைக் கூறு போடுவதை இன்னும் கொஞ்சம் உரக்கச் சொல்லுங்களேன்.

நாங்கள் எல்லோரும் சேர்ந்து முடிவெடுக்காவிடில் இவை எம்மினத்தைக் கருவறுத்துவிடும் என்று பயமாக இருக்கிறது.

**சண்முகேசன் அரியரட்ணம்**
**(தாயகம்)**




அட்டைப்படம் உணர்வைத் தொடுவதாக இருந்தது. முதிய பெற்றோர்கள் விதையான தங்கள் குழந்தைகளுக்கு விளக்கேற்றுவது கொடுமையிலும் கொடுமை. ஈரவாசம் கவிதையும் உணர்வைத் தூண்டுவதாக இருந்தது. சந்திரிகாவின் கவிதைகள் முன்பே படித்துள்ளேன். அருமை. வலை நெடுந்தொடர் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய ஒரு சமுகக் கதையாகச் செல்வது சிறப்பு.

**கீதாஞ்சலி சந்திரகாந்தன்**
**(நெதர்லாந்து)**

நில ஆக்கிரமிப்பு பற்றி வாசிக்கையில் நடுக்கமாக இருக்கிறது. பாய் விரித்துப் படுக்கவும் இடம் மிஞ்சுமா என்று அச்சம் வருகிறது. பிறநாட்டுப் போராட்டங்கள் பற்றி வாசிக்கும் போது எங்கள் பிள்ளைகளின் கஷ்டங்களும் தியாகங்களும் முன்னே தோன்றி கண்ணைக் கரிக்கின்றன. 'தீபத் திருவிழா' கவிதை நன்று. எல்லா ஆக்கங்களுமே மிக நன்றாக உள்ளன. மேலும் சிறப்படைய வாழ்த்துகிறோம்.

**நாகநாதன் குடும்பம்**
**(இத்தாலி)**

என்னுடைய பாட்டி வற்புறுத்தி என்னை 'வலை' நெடுங்கதை படிக்க வைத்தார். இப்போது அந்தக் கதைக்கு நான் அடிமை. சூப்பராகவும் அங்குள்ள பிரச்சனைகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் வகையிலும் அருமையாகப் போகிறது.

வெளிநாட்டு வேலைக்கெனப் பெண்களை எடுத்து விற்பனை செய்வதும் அவர்கள் சந்திக்கும் கொடுமைகளும் அந்தக் கட்டுரை படித்தபின் இரவுகளில் நித்திரை கொள்ளவே முடியவில்லை. பெண்கள் மிகவும் அவதானமாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும்.

**ஸ்ரெல்லா யேசுதாசன்**
**(ஜேர்மனி)**

அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினால் எத்தனை உயிர்கள் பலியாகிப் போகின்றன? கிண்ணியா படகு விபத்தும் அந்த மாதிரித்தான். இவை போன்றனவற்றை விபத்துக்கள் என்று எடுக்கக் கூடாது. கொலைகளும் கொலை முயற்சிகளும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும். அரசின் உயர் பதவிகளில் இருப்பவர்கள் பணத்தைச் சுருட்டுவதுடன் அப்பாவி உயிர்களையும் அல்லவா பலியெடுக்கிறார்கள்?

**ஊர்ப்பறவை**
**(கிண்ணியா)**

மிதயா கானவியின் கவிதைகளில் ஒரு சோகமும் அதை வெல்லும் வைராக்கியமும் இருக்கும். 'ஒரு விடியல் வரும்' கவிதையும் அப்படித்தான். ஐங்கரன் விக்னேஸ்வரா எழுதிய 'நடுகல்' பற்றிய கட்டுரை அருமை. இப்போது தொடர்ந்து எழுதுகிறார் போல தெரிகிறது. நிறைய விடயங்களை அவரின் கட்டுரைகளில் இருந்து தெரிந்து கொள்கிறோம். நல்ல முயற்சி. தொடரட்டும் சகோதரா.

**அபிவர்மன் சேந்தன்**
**(நியூயார்க்.)**

'வங்கம் தந்த பாடம்' உண்மையில் எங்களுக்கும் ஒரு பாடம்தான். தன்னம்பிக்கைக் கதைகள் போடுவது அவசியம் என்பது எனது கருத்து. 'அன்புள்ள' கவிதையை எழுதிய அன்பு உள்ளம் படும் வேதனை புரிகிறது. எத்தனை எத்தனை பேர் இப்படி வாழாமல் வாழ்கிறார்கள். வேதனை.

**மாலினி கணேசன்**
**(லண்டன்)**

போதைப்பொருள் பாவனையைத் தடுப்பது பற்றி டாக்டர் எழுதிய சிறந்த அறிவுரை எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும். போதைப் பழக்கம் முற்றாக ஒழியும் வரை இதைப்பற்றி தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொண்டே இருங்கள். முல்லை பாஸ்கர் எவ்வளவு அழகாக மரங்களின் அவசியத்தை கவிதையில் கூறியுள்ளார். சிறப்பு. மலையக மக்களின் பிரச்சினைகளை இப்போது தான் தொட ஆரம்பித்து இருக்கிறீர்கள். இங்கு பெண்கள் உலகிற்குத் தெரியாத பல கொடுமைகளை அனுபவிக்கிறார்கள். கேட்டால் தலை சுற்றும். எல்லாவற்றையும் வெளிச்சத்துக்குக் கொண்டு வாருங்கள்.

**கரு. சரஸ்வதி**
**(பதுளை)**

**ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை வெளிக் கொணர்வதற்கு அரிய வாய்ப்பு**

அரசியல் கட்டுரைகள், பத்தி கட்டுரைகள், சிறுகதைகள் , கலை, கலாசார, சமூக ஆக்கங்களையும் உங்கள் படைப்புக்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.




ezhunilam@yahoo.com

# தீர்வு என்கிற மாயமான்

## ஆசிரியர் பக்கம்

பதவி நாற்காலிகளை இறுக்கிப் பிடித்து தம்வசம் வைத்திருப்பதற்காக, 'அடுத்த பொங்கலுக்குள் தீர்வு' என்ற பொய்யான வாக்குறுதியை வருடா வருடம் அள்ளி வீசுவது எங்கள் மக்கள் பிரதிநிதிகளிற்கு கைவந்த கலை. எமது மக்களும் வெகுளியானவர்கள். நேர்மறை எண்ணம் கொண்டவர்கள். கிட்டத்தட்ட எட்டு தசாப்தங்களாக ஏமாற்றப்பட்டு மட்டுமே வந்திருக்கிறோம் என்று தெரிந்தும், அவற்றையெல்லாம் மறந்து, இந்த வாக்குறுதிகளை நம்பித் தொலைத்து விடுகிறார்கள். அடுத்த பொங்கலை வரவேற்கத் தயாராகி விடுகிறார்கள். அந்தப் பொங்கலில் தீர்வு கிட்டாவிட்டால் என்ன? அடுத்த தேர்தலில் மீண்டும் வாக்குகளை அள்ளிப் போட்டு எங்கள் பிரதிநிதிகளை



பாராளுமன்றிற்கு அனுப்பி, அடுத்த வாக்குறுதிக்கு காத்திருப்பதற்காக தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்கின்றனர்.

இம்முறை சற்று வித்தியாமானது. 'சுதந்திர தினத்திற்கு முன்பு தமிழர்களுக்கான தீர்வு' என்று அரச தரப்பிலிருந்து அறைகூவல் எழுந்துள்ளது. 'வயிற்றுப் பிள்ளையும் வழுகி வீழும்' அளவிற்கு கனகச்சிதமாகப் பேசி காரியத்தைச் சாதிப்பதில் வல்லவர் என்று நம்பப்படும் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இம்முறை களத்தில் குதித்துள்ளார். மக்கள் கிட்டத்தட்ட மறந்து போயுள்ள வட்ட, சதுர மேசைகளில் சர்வகட்சிகளும் கூடியிருந்து பேசி, தீர்வை எட்டிவிடப் போகிறார்களாம். அதுவும் அடுத்த சுதந்திர தினத்தினுள்.

'கேட்பவன் கேனையனாக இருந்தால் கேப்பையில் நெய் வடிகிறது' என்று யார்தான் சொல்ல மாட்டார்கள்?

சட்டத்தின் நுணுக்கங்கள், விளக்கங்கள் பற்றிய விரிவான அறிவு பாமர மக்களுக்கு இல்லாதிருக்கலாம். ஆனால், ஒரு அரசியல் சாசனத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதோ அல்லது புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வருவதோ இவ்வளவு குறுகிய காலத்தினுள் செய்ய முடியாது என்பதை அறியாதவர்களல்லர் எம்மக்கள். இவற்றைச் செய்வதற்கென ஒரு கால அவகாசம் இருக்கிறது.

ஒரு சட்டத் திருத்தத்தையோ அல்லது ஒரு புதிய அரசியல் யாப்பையோ கொண்டு வர வேண்டுமென்றால் முதலில் பாராளுமன்றில் அனுமதி பெற வேண்டும். மூன்றில் இரண்டு அதிகப்படி வாக்குகளால் வென்று மக்கள் பிரதிநிதிகளின் அனுமதியைப் பெற வேண்டும். அதன்பின் சர்வசன வாக்கெடுப்பு மூலம் அதை மக்களிடம் எடுத்துச் சென்று மக்கள் அனுமதியைக் கோர வேண்டும். அதன் பின்னர்தான் அதை சட்டபூர்வமாக நடைமுறைப்படுத்த முடியும்.

தமிழ்த்தரப்பு எதிர்க்கட்சியாக இருந்த 'நல்லாட்சி' க் காலத்தில் இதற்கு ஒரு நல்ல வாய்ப்பிருந்தது. அப்போது இதே ரணில் விக்கிரமசிங்க தலைமைப் பொறுப்பில் இருந்தார். ஐந்து வருட நல்லாட்சியில் சாதிக்க முடியாததை, இப்போது, ஒரு மாதத்தினுள் தீர்க்கப் போவதாக விடும் புருடாவின் நம்பகத்தன்மைதான் கேள்விக்குறியாகவுள்ளது. பேச்சுவார்த்தை நடத்தி தமிழர்களின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க எடுக்கும் முயற்சி வரவேற்கத்தக்கது எனினும் அதற்காக அரசு சொல்லும் கால அவகாசம் அவர்களின் உண்மை சொரூபத்தை மீண்டும் ஒருமுறை தோலுரித்துக் காட்டுகிறது எனலாம்.

இந்தப் பொய்யான வாக்குறுதி வேறெதற்குமல்ல. சர்வகட்சி மாநாடு நடத்தி, நீண்டகால தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணவிருப்பதான ஒரு பிம்பத்தை வெளியுலகிற்குக் காட்டி, தமிழ் மக்களை முன்னிறுத்தி கடன் பிச்சை எடுப்பதற்கான கபட நாடகமே இது. இந்தச் சர்வகட்சி மாநாட்டினால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதையும் காணாமற் போய்விடும் என்பது இந்தக் கபடதாரிகளின் கணிப்பீடு.

தமிழ்மக்கள் மீண்டும் பலிக்கடா ஆக்கப்படாமல் தடுக்க வேண்டியது தமிழ் அரசியல்வாதிகளிற்கான தார்மீகக் கடப்பாடாகும். இவ்வளவு காலமும், தங்கள் பிரதிநிதிகளாக உங்களுக்கு வாக்களித்து பதவிகளில் உட்கார வைத்திருக்கும் மக்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய நன்றிக்கடன் இது. இந்தப் பேச்சுவார்த்தை காலத்தை சரியாகப் பயன்படுத்தி, ஒற்றுமையாக ஓரணியில் நின்று நொந்து போயிருக்கும் எம் மக்களுக்கு ஒரு சரியான தீர்வைப் பெற்றுத்தர முயலுவார்களா? அல்லது இடையில் எனக்கென்ன ஆதாயம் என்று அரசுடன் சேர்ந்து மீண்டும் மக்களுக்குக் குழி பறிப்பார்களா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# கொள்ளை போகும் கடல் வளம்



பாரி

பெரியளவில் முதலீடு செய்யாமலே மிகப்பெரிய அளவில் பயன் தருவது கடல்வளம். அது எங்களுக்கு கொட்டிக் கிடக்கின்றது. சிறு தீவான இலங்கையைச் சூழ இருக்கும் ஐந்து லட்சத்து பதினேழாயிரம் சதுர கிலோமீற்றர் கடற்பரப்பானது ஒரு இயற்கை தந்த வரம். இலங்கையைச் சூழ்ந்திருக்கும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்து கிலோமீற்றர் நீளம் கொண்ட இலங்கைக் கடற்கரையில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதி வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்குச் சொந்தமானது.

இது தவிர, உலகின் கவனத்தை ஈர்த்துள்ள மீன்பிடி மேடை எங்கள் வசம் உள்ளது. எங்களைச் சூழ அகலமான கண்ட மேடையும் பவளப் பாறைகளுமாக அரிய வளம் கொட்டிக் கிடந்தும் அது எமது மக்களின் வாழ்வாதாரத்துக்கு வழிசெய்ய விடாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் பெரும் பொருளாதார வாழ்வியல் விவசாயம். அதற்கு அடுத்தபடியாக இருப்பது கடற் தொழில். தரையிலிருந்து 200 கிலோமீற்றர் தூரம்வரை சென்று மீன்பிடிக்கும் பொருளாதார வலயம் மட்டுமல்லாது, கடலட்டை, இறால், நண்டு வளர்ப்பிற்கான தகுந்த இடமும் எங்களிடம் உண்டு.



எல்லாம் இருந்தும் கடல் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடமே தேங்கிக் கிடப்பதால், தொழில் செய்ய வழியற்றுக் கிடக்கிறார்கள் எமது மீனவர்கள். அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வழிகள் இருந்தும், தமிழ் மக்களுக்கு கடலை மூடி, அவர்களின் வாழ்வியலைச் சிதைத்து, அந்நிய தேசங்களிடம் கையேந்தி நிற்கிறது இந்த இனவாத அரசு.

2022 இல் முழு இலங்கைக்குமான இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனம் தான் 60 மில்லியன் ரூபா நட்டமடைந்ததாக அறிவித்திருக்கிறது. இதே கூட்டுத்தாபனம் 2021 இல் 63 மில்லியன் ரூபாக்களையும், 2020 இல் 48 மில்லியன் ரூபா பணத்தையும் நட்டமடைந்திருந்தது.

அதே போன்று, இலங்கையின் மீன்பிடி துறைமுக அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2022 இல் 97 மில்லியன் ரூபாக்களையும், 2021 இல் 121 மில்லியன் ரூபாக்களையும், 2020 இல் 234 மில்லியன் ரூபாக்களையும் நட்டத்தில் இழந்திருப்பதாக அறிவித்திருக்கின்றது. இந்த அறிவிப்புக்களின் பின்னாலும் முதலாளி வர்க்க முதலைகள் இருக்கின்றன. மக்களின் பணத்தை இந்த முதலைகள் தின்று கொழுத்திருப்பதும் அவர்கள் கபளீகரம் செய்த தொகை வெளிநாடுகளில்



# கொள்ளை போகும் கடல் வளம்

கள்ளப்பணமாகப் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதும் இப்போது வெளிப்படையான இரகசியம். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது அப்பாவி மக்களே. இருந்தும் எதுவும் செய்யவியலாது கையறு நிலையில் உள்ளார்கள் அவர்கள்.

இவற்றின் விளைவாக, 2022 இல் மட்டும் மொத்த மீன் உற்பத்தியில் 10.1 சதவீத வீழ்ச்சி கண்டுள்ளது இலங்கை. அள்ள அள்ளக் குறையாத கடல் வளம் இருந்தும், சரியான ஆய்வுகளை மேற்கொண்டு, முதலீட்டையும் ஆளணியையும் போட்டு, பொருத்தமான தொழில்நுட்ப வசதியைப் புகுத்தி கடல் வளத்தை மேம்படுத்தும் அக்கறையோ, திறனோ அற்ற அரசின் விளைவினால் கடல் சூழ்ந்த இலங்கை ரின்மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

2019 இல் 13.8 பில்லியன் ரூபா பணத்திற்கு 37,000 மெட்ரிக் தொன் ரின் மீன்களும், 2020 இல் 11 பில்லியன் ரூபா செலவில் 26,500 மெட்ரிக் தொன் ரின்மீன்களும், 2021 இல் 5 பில்லியன் ரூபாக்களுக்கு 9,000 மெட்ரிக் தொன் ரின்மீன்களும் இறக்குமதி செய்யப்பட்டதாக கணக்குக் காட்டுகிறது இலங்கை அரசு.

இலங்கை கையேந்தி நிற்கும் நாடுகளில் ஒன்று யப்பான். கடல்வளத்தைப் பயன்படுத்தி பெருவளர்ச்சி கண்டு உலகின் கவனத்தை ஈர்த்த ஒரு நாடு யப்பான். அவர்களிடம் கடற்தொழில் விருத்திக்கான தொழில்நுட்ப உதவிகளை இலங்கை கோரியிருந்தால் அதில் ஒரு நியாயம் உண்டு. ஆனால் அப்படியொரு உதவிக்கு அரசு கையேந்தியதாகத் தெரியவில்லை. பட்டுப் பாதைத் திட்டம் என்ற பெயரில் சீனாவிற்கு நாட்டைத் திறந்து விட்டு, பின்னர் படிப்படியாக முழு இலங்கையையும் அந்நியருக்கு அடகு வைத்த அரசு, எங்கள் வளமிக்க



**யாழ் தீபகற்பத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மீனவ சங்கங்கள் உள்ளன. சங்கங்களின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக, இவை எவற்றிலும் அங்கத்துவம் வகிக்காத அரச அடிவருடிகளுக்கும், சீனாவுக்கும் இந்தியர்களுக்கும், தென்னிலங்கைச் சிங்களவர்களுக்கும் இங்கு கடலட்டைப் பண்ணை அமைக்கும் அனுமதியைக் கொடுத்துள்ளது மத்திய அரசு. தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட அரசின் செயற்பாடுகளே இவை. கடல்வளத்துறை அமைச்சராக இருக்கும் தமிழ்பேசும் துரோகி டக்ளஸ் தேவானந்தாவினூடாக இவையெல்லாம் திட்டமிட்ட முறையில் அரங்கேற்றப் படுகின்றன.**



# கொள்ளை போகும் கடல் வளம்

கடற்பரப்பையும் அந்நிய சக்திகளுக்குக் கூறுபோட்டு விற்பதை எப்படி அனுமதிக்க முடியும்? குறிப்பாக, தமிழர் நிலப்பறிப்புக்கு இணையாக கடலும் கொள்ளை போவதை வெளிப்படையாகக் காண முடிகிறது.

யாழ் தீபகற்பத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மீனவ சங்கங்கள் உள்ளன. சங்கங்களின் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக, இவை எவற்றிலும் அங்கத்துவம் வகிக்காத அரச அடிவருடிகளுக்கும், சீனாவுக்கும் இந்தியர்களுக்கும், தென்னிலங்கைச் சிங்களவர்களுக்கும் இங்கு கடலட்டைப் பண்ணை அமைக்கும் அனுமதியைக் கொடுத்துள்ளது மத்திய அரசு.

**எல்லாம் இருந்தும் கடல் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடமே தேங்கிக் கிடப்பதால், தொழில் செய்ய வழியற்றுக் கிடக்கிறார்கள் எமது மீனவர்கள்.**

**அந்நிய செலாவணியை ஈட்டக்கூடிய வழிகள் இருந்தும், தமிழ் மக்களுக்கு கடலை மூடி, அவர்களின் வாழ்வியலைச் சிதைத்து, அந்நிய தேசங்களிடம் கையேந்தி நிற்கிறது இந்த இனவாத அரசு.**

தமிழ் மக்களுக்கெதிரான திட்டமிட்ட அரசின் செயற்பாடுகளே இவை. கடல்வளத்துறை அமைச்சராக இருக்கும் தமிழ்பேசும் துரோகி டக்ளஸ் தேவானந்தாவினூடாக இவையெல்லாம் திட்டமிட்ட முறையில் அரங்கேற்றப் படுகின்றன.

யாழ் தீவகத்தில் 300 ஏக்கர் நிலம் கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கெனச் சீனர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. புங்குடுதீவில் சிங்களவர் ஒருவருக்கு முப்பது ஏக்கர் நிலத்தில் கடலட்டைப் பண்ணை அமைக்க நிலமும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. இந்திய, சீன முகவர்களை அழைத்துக்கொண்டு, மன்னாரிலும் வடமராட்சி கிழக்கிலும் தீவகப் பகுதியிலும் கடலட்டை வளர்க்கப் பொருத்தமான இடம் தேடித் திரிகிறார் அடிவருடி மந்திரி டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரரும் வடமாகாண 'டயலொக்' முகவருமான தேவானந்தா. இழுவைப் படகுகளில் வந்து எமது மீனவர்களின் வலையைச் சேதமாக்கும் இந்திய மீனவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கண்டும் காணாமலும் இருக்கும் டக்ளஸ் தமிழ்ப் பகுதியைக் கூறு போட்டு விற்று தனக்கு ஆதாயமாக்குவதில்தான் மும்முரமாகவுள்ளார்.

தமிழ் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் அனுமதியும், சிறு முதலீடும் தொழில் நுட்ப வசதிகளும் செய்து கொடுத்தாலே போதும். முயற்சியே மூலதனமான தமிழ் மக்கள் முழு இலங்கைக்குமான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி விடுவார்கள். தமிழர்களுக்குத் தண்டனை கொடுப்பதாக எண்ணிக்கொண்டு, நாட்டைத் துண்டாடி அந்நியருக்கு விற்று தனது மூக்கைத் தானே அறுத்துக் கொள்கிறது இலங்கை அரசு. தானும் பயன்படுத்தாமல் தமிழருக்கும் வழியை விட்டுக் கொடுக்காமல் 'வைக்கோற் போரில் எதுவோ' போல இருக்காமல் மக்களுக்கான தொழில் வசதிகளைச் செய்தால் மட்டுமே போதுமானது. மக்கள் நிம்மதியாக தங்கள் உழைப்பிலே தாம் வாழ வழி பிறக்கும். நாடு நாடாக கையேந்த வேண்டியதில்லை. நடக்குமா?



புனித பிரியா (நுவரெலியா)

# தினேஷ் ஷாஃப்டருக்கு என்ன நடந்தது?

உயிரோடுள்ள மனிதனை விட இறந்த மனிதனைக் குறித்து அறிய வேண்டும் என்ற ஆசை உலகில் எல்லாருக்கும் உள்ளது. சமீபத்தில் கொழும்பு மயானத்திலோ அல்லது அதற்கு அருகாமையிலோ அடித்துக் கொல்லப்பட்ட தினேஷ் ஷாஃப்டரை, அவர் இறக்கும் வரை அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வர்த்தக உலகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அறிந்திருந்தனர். ஆனால் கொலை நடந்த 24 மணி நேரத்திற்குள் தினேஷ் ஷாஃப்டரின் பெயர் ஊடகங்களால் மிகவும் பிரபலமானது.

இதுவரை அவரது கொலையும், அது எப்படி செய்யப்பட்டது என்பதும் மர்மமாகவே இருக்கிறது. இது தொடர்பாக 4 பொலிஸ் குழுக்களை பயன்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு குறிப்பிட்ட நபரிடம் இருந்து பெற வேண்டிய நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் அல்லது அதற்கும் குறைவான தொகையைப் பற்றி விசாரிக்க வீட்டை விட்டு வெளியே செல்கிறேன் என்று தனது மனைவியிடம் கூறி சென்ற தினேஷ் ஷாப்டர் உயிருடன் வீடு திரும்பவில்லை. அவரது கொலையில் முதல் சந்தேக நபர் பிரையன் தாமஸ் – கிரிக்கெட் வர்ணனையாளர் மற்றும் கோடீஸ்வர தொழிலதிபர். அவருடன் விரிவான கொடுக்கல் வாங்கல்கள் இருந்துள்ளன. ஆனால், கொலை நடந்த அன்று பிரையன் தாமஸ் வீட்டில் இருந்ததாக தெரிய வந்துள்ளது. தினேஷ் ஷாஃப்டரின் கொலை குறித்து பல சந்தேகங்கள் உள்ளன.

வணிக உலகில் தினேஷ் ஷாஃப்டரின் மிகப்பெரிய முறுகல் நிலை பிரையன் தாமஸுடன்தான் இருந்தது. பிரையன் தாமஸ் தன்னுடன் மேற்கொண்ட சில பண பரிவர்த்தனைகள் தொடர்பாக தினேஷ் ஷாப்டர் சிஐடியிடம் பல முறைப்பாடுகளையும் செய்திருந்தார். இதன் காரணமாக, அநேகர் பிரையன் தாமஸை இந்த கொலையுடன் தொடர்புபடுத்துகிறார்கள். அப்போது கொலைக் கணக்கை விரைவாக மூடிவிடலாம். இதேவேளை, இலங்கையின் வர்த்தக உலகில் தினேஷ் ஷாப்டர் என்னென்ன ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளார் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இவர்





**தினேஷ் ஷாப்டரை அவருடைய சொந்த காரில் ஏற்றி கொழும்பு மயானத்திற்கு எப்படி அழைத்துச் சென்றார்கள் என்பதற்கான சரியான ஆதாரம் இன்றும் கிடைக்க பெறவில்லை. ஒன்று தினேஷ் ஷாப்டரை பொரளை மயானத்திற்கு வருமாறு யாராவது கூறியிருக்க வேண்டும். அத்துடன், கல்லறையில் மறைந்து காத்திருந்த, மனிதாபிமானம் அற்றவர்களினால் தினேஷ் ஷா∴ப்டரின் தலைவிதி முடிவு செய்யப்பட்டிருக்கலாம். மனிதாபிமானமற்றவர்கள் பேச முடியாது. எனவே, இந்த கொலைக்கான மிக முக்கிய ஆதாரத்தை வெளியே கொண்டுவர முடியாது.**



ஜனசக்தி இன்சூரன்ஸ் நிறுவனத்தின் தலைவர். அத்துடன், அவர் இந்த நாட்டில் தற்போது பொதுவான நிதி முகாமைத்துவம் அல்லது பிரமிட் திட்டங்களில் அவர் பணத்தை முதலீடு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

PONZI SCAMகளில் அதிகளவு பணத்தை முதலீடு செய்பவருக்கு பொதுவாக இரண்டு முடிவுகள் கிடைக்கும். முதலாவது நஷ்டமடைதல். இரண்டாவது பிரமிட் வியாபாரிகளின் கைகளினால் கொலை செய்யப்படுதல். உலக வர்த்தக மையத்தில் பிரமிட் திட்டத்தை நடத்தி வந்த திலினி பிரியமாலி முதலீட்டாளர்களிடம் இருந்து 1.2 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை பெற்று நாசப்படுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது. தினேஷ் ஷாஃப்டர் சில பிரமிட் திட்டங்களில் அல்லது இதுபோன்ற பல திட்டங்களில் அதிக பணத்தை முதலீடு செய்ததாக வதந்தி பரவுகிறது. சதித் திட்டங்களின் விளக்கங்கள் இல்லாமல் இவை அனைத்தும் உண்மையான கதையாக இருக்க முடியாது. தினேஷ் ஷாப்டரின் கொலையாளிகள் யார் என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வரும். அது மீண்டும் வெளிப்பட வாய்ப்பில்லை என்பதும் சாத்தியமாகும்.

உதாரணமாக, லசந்த விக்கிரமதுங்கவை கொன்றது யார் என்பது இன்றும் அது மர்மமாகவே உள்ளது. இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸாரும் பல்வேறு சந்தேக நபர்களை முன்வைத்த போதிலும், அவற்றில் எதுவுமே சரியான கொலையாளியை இனங்காண சாட்சியாக அமையாதது வருந்தத்தக்கது. வசீம் தாஜுதீன் விபத்தில் இறந்தாரா அல்லது கொல்லப்பட்டு காரில் வைத்து தீ வைத்து எரிக்கப்பட்டாரா என்பது இன்னும் வெளிவராத இரகசியமாகவே இருக்கிறது. இதற்கு சில காலங்களுக்கு முன்னர் இலங்கை ரக்பி அணியில் இடம்பெற்றிருந்த வெளிநாட்டவர் ஜோயல் ப்ரேரா கெசினோ கிளப்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த கொலையாளி யார் என்ற விவரம் இன்று வரை வெளியாகவில்லை.

இறந்த ஜெய்ல் ப்ரேரா பிஜி தீவின் தேசிய வீரராவார். பிஜி தீவு மக்களுக்கு தங்கள் தேசிய வீரரைக் கொன்றது தொடர்பாக இலங்கையர்களுடன் இன்னும் முறுகல் காணப்பட்டு தான் வருகின்றது. புகழ்பெற்ற மருசிரா உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் அவர் தூக்கிலிடப்பட்டாரா இல்லை கொலை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டாரா என்ற உண்மை இன்றும் மர்மமாகவே இருக்கின்றது. இந்த கொலைகள் அனைத்தையும் சுற்றி பல சந்தேகத்திற்குரிய சதி திட்டங்கள் அநேகம் உள்ளன. இந்நிலையில் தினேஷ் ஷாஃப்டரின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளியை கண்டுபிடிப்பது என்பது எட்டாப்பழத் துக்கு கொட்டாவி விட்டது போன்ற ஒரு செயலாகும்.முதலாளித் துவத்தில் ஒரு பிரபல தொழிலதிபர்களைக் கடத்துவதும் கொலை செய்வதும் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன.

முதலாளித்துவத்தில் இவை ஒப்பந்தக்காரர்களால் செய்யப்படுகின்றன. இந்த நிலை சோசலிசத்தில் இல்லை. காரணம், சோசலிசத்தில் தனிப்பட்ட தொழில்கள் உள்ளன அல்லது அதற்கான வணிகர்கள் இல்லாதிருத்தல். சோசலிசத்தில், கொலை என்பது அரசாங்கத்தால் செய்யப்படுகிறது. வணிகர்கள் இல்லாத பொருளாதார அமைப்பு என்பதால், சோசலிசத்தில் கொலை செய்யப்படுபவர்கள் அரசுக்கு எதிரானவர்கள். சோவியத் ரஷ்யாவில் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சி காலத்தின் போது, இலட்சக் கணக்கான அரசாங்க எதிர்ப்பாளர்களும் அரசாங்க எதிர்ப்பு அதிகாரிகளும் கொல்லப்பட்டனர். காலையில் ஒரு அரசாங்க எதிர்ப்பு அதிகாரியுடன் தேநீர் அருந்தும் ஜோசப் ஸ்டாலின், இரவில் அந்த அதிகாரியைக் கொல்ல தனது இரகசியப் போலீஸான லெவரெந்தி பெரியாவை வைத்து கொலை செய்வார். அடுத்த நாள், இறந்த அதிகாரியின் மையப்படுத்தியே சுமக்கவும் இறுதி சடங்கிற்காக செல்வார்.



மாவோ சேதுங் சீனாவைக் கைப்பற்றிய பிறகு இது பெரிய அளவில் நடந்தது. கிம் இல் சுங்கினால் சோசலிசவாதியான கொரியாவை நிறுவிய பிறகு இது பெரிய அளவில் நடந்தது. புடின் ரஷ்யாவைக் கைப்பற்றிய பிறகும் இது இப்படி தான் நடந்தது. ஆனால் முதலாளித்துவத்தில், இவை மிக எளிதாகவும், குறைந்த செலவில் பகிரங்கமாகவும் நடக்கின்றன. முதலாளித்துவத்தின் அரசியல் வடிவம் ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஏமாற்று வார்த்தையால், இந்த நாட்டு மக்கள் ஓயாமல் ஜனநாயகத்தில் உள்ள சுதந்திரத்தைப் போற்றிப் பிதற்றுகிறார்கள். அவர்களின் கண்கள் ஜனநாயக கருப்பு துணி பட்டியால் முழுமையாக மூடப்பட்டுள்ளன.

எனவே, தினேஷ் ஷாப்டரை அவருடைய சொந்த காரில் ஏற்றி கொழும்பு மயானத்திற்கு எப்படி அழைத்துச் சென்றார்கள் என்பதற்கான சரியான ஆதாரம் இன்றும் கிடைக்க பெறவில்லை. ஒன்று தினேஷ் ஷாப்டரை பொரளை மயானத்திற்கு வருமாறு யாராவது கூறியிருக்க வேண்டும். அத்துடன், கல்லறையில் மறைந்து காத்திருந்த, மனிதாபிமானம் அற்றவர்களினால் தினேஷ் ஷாஃப்டரின் தலைவிதி முடிவு செய்யப்பட்டிருக்கலாம். மனிதாபிமானமற்றவர்கள் பேச முடியாது. எனவே, இந்த கொலைக்கான மிக முக்கிய ஆதாரத்தை வெளியே கொண்டுவர முடியாது.

**( இவை எழுத்தாளரின் சொந்தக் கருத்துகளாகும்.)**



# பிளவின் விளைவு

**100** பேர் தங்கும் விடுதியில், தினமும் காலை உணவாக உப்புமா பரிமாறப்பட்டது. அந்த 100 பேரில், 80 பேர் 'தினமும் உப்புமாவுக்குப் பதிலாக வேறு சாப்பாடு செய்து தர வேண்டும்' என்று புகார் கூறி வந்தனர்.

ஆனால், மீதமுள்ள இருபது பேரும் எதுவுப் பேசாமல் தினமும் உப்புமாவையே சாப்பிட்டு மகிழ்ந்தனர். 80 பேர் உப்புமாவைத் தவிர வேறுவேறாக ஏதாவது சமைக்க விரும்பினர்.

இந்தக் குழப்பமான சூழ்நிலையில் சில முடிவுகள் எடுக்க வேண்டியிருப்பதால், விடுதி நிர்வாகியால், 'வாக்களிக்கும் முறை' முன்மொழியப்பட்டது.

இதன்படி 'எந்த உணவு அதிக வாக்குகளைப் பெறுகிறதோ அந்த உணவு அன்றைய தினம் காலையில் சமைக்கப்படும்' எனத் தீர்மானிக்கப்பட்டது.

உப்புமா விரும்பும் 20 மாணவர்கள் துல்லியமாக வாக்களித்தனர். மீதமுள்ள 80 பேரும் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர்.

**18 பேர் - மசாலா தோசை**
**16 பேர் - ஆலு பரோட்டா தாஹி**
**14 பேர் - ரொட்டி சப்ஜி**
**12 பேர் - ரொட்டி வெண்ணெய்**
**10 பேர் - நூடுல்ஸ்**
**10 பேர் - இட்லி சாம்பார்**

எனவே, வாக்களிப்பு முடிவுகளின்படி, 'உப்புமா அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றது'. அதனால், உத்தியோகபூர்வமாக ஒவ்வொரு நாளும் அதுவே வழங்கப்படுகிறது.

## பாடம்:

மக்கள் தொகையில் 80% சுயநலவாதிகளாகவும், பிளவுபட்டவர்களாகவும், சிதறடிக்கப்பட்டவர்களாகவும், ஒருவரோடு ஒருவர் விட்டுக்கொடுத்து ஒத்துப் போக முடியாதவர்களாகவும் இருக்கும் வரை, எமக்குப் பிடிக்காவிட்டாலும் அந்த 20% பேர் நம்மை ஆளுவார்கள்.

**இது ஒரு மௌன செய்தி.**



# கவிதையே உயிர் மூச்சாகிய புதுவை இரத்தினதுரை!!

(மக்களின் விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்துக் கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறியபுதுவை, போர் மௌனித்த 2009 மே 19க்குப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்தக் கவிஞனுக்கு என்னசொல்லப் போகிறது இந்த உலகம்? டிசம்பர் 3ம் திகதி ஈழப் பெருங்கவி புதுவை இரத்தினதுரையின் பிறந்த நாளையொட்டி இக்கட்டுரைபிரசுரமாகிறது.)



ஐங்கரன் விக்கினேஸ்வரா

## களத்தில் நின்று காலத்தை வென்ற கவிஞன்!! இனத்தின் குரலாய் கடைசிவரை ஓயாத கலைஞன்!

புதுவை இரத்தினதுரையின் படைப்பிலக்கியம் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு உந்துசக்தியாக இருந்ததை மறுதலிக்க முடியாது. சுதந்திர கவிதை உலகில் போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த பெருமை அவரைச் சாரும்.

உண்மையில் விடுதலைப்போரின் வரலாற்றுடன் சேர்ந்து அவரது கவிதைகளும் சமாந்திரமாகவே பயணித்துள்ளன எனலாம்.

கனதியான கவிதை வீச்சும், உயிர் மூச்சுமான அவரது படைப்புக்களுக்கு ஈழ விடுதலைப்போரில் தனியானதோர் இடமுண்டு. ஈழ விடுதலைப் போராட்டம் போரியலில் முனைப்புப்பெற்ற 1987க்கு முந்திய காலத்தில் அவரது கவிதைகள் ஒரு தேசம் என்ற கருத்தின் வலிமையை உரைத்தன. அவையே எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையை எடுத்துக் கூறின.

### விடுதலைப் போர்க்கவி புதுவை:

விடுதலைப் போராட்ட வரலாற்றில் விடுதலைக்காக கவிஞர் புதுவை இரத்தினதுரை, போராட்டத்தில் பங்கேற்று புரட்சிப் பாக்களை எழுதி இளைஞர்களை எழுச்சிகொள்ளச் செய்தவர். கவிஞர் புதுவையின் ஆழ வரிகளை ஒரு முறை உணர்ந்து பார்த்தோமானால்,


*“இழந்து போனவனுக்கு*
*வாழ்க்கை துயரம்*
*எழுந்து நடப்பவனுக்கு*
*எல்லாமே மதுரம்*
*துயரம் அழுவதற்காக*
*அல்ல எழுவதற்காக*
*எனத் தைரியம் மேலோங்கும்.”*

### புத்தூரில் மலர்ந்த புதுவை:

புதுவை இரத்தினதுரை என அழைக்கப்படும் வரதலிங்கம் இரத்தினதுரை புத்தூரில் 1948 டிசெம்பர் 3 இல் பிறந்தார். இவர் ஈழத்துக் கவிஞரும், பாடலாசிரியரும், சிற்பக் கலைஞரும் ஆவார். ஏராளமான தமிழ்த் தேசியப் புரட்சிப் பாடல்களை எழுதியுள்ளார்.

14வது வயதிலேயே கவிதைகளை எழுதத் தொடங்கிய இவர் வியாசன், மாலிகா என்ற புனைபெயர்களிலும் பல கவிதைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய இந்த மண் எங்களின் சொந்த மண் பலரது வரவேற்பையும் பெற்ற உணர்வு பூர்வமான பாடல் ஆகும்.

புதுவை இரத்தினதுரை எழுதியவானம் சிவக்கிறது (1970), இரத்த புஷ்பங்கள்(1980), ஒரு தோழனின் காதற் கடிதம், நினைவழியா நாட்கள் , உலைக்களம் , பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் ஆகியன வெளிவந்த கவிதைத் தொகுப்புகள் ஆகும்.



## களத்தில் நின்ற கவிஞர்:

ஒரு படைப்பாளி தன் சொந்த அனுபவங்களில் உயிர் வாழ்கிறான். படைப்பாளியின் சுயானுபவம் அதில் தங்கியிருக்கிறபோது படைப்பு உயிர்ப்போடு நிற்கும். ஒவ்வொரு படைப்பாளிக்கும் அவரவர் வாழ்வியல் சார்ந்து அனுபவம் ஒவ்வொரு வகையாய் அமையும். அவ்வாறே புதுவையின் வரிகளில்.

*வெடிக்கும் எதிரிகணைகள்*
*ஒவ்வொன்றுக்கும்.*
*விரல்மடித்துக்*
*கணக்கெடுத்தபடி*
*இருந்தேன்*
*இடையிற் கண்ணயர்ந்து*
*போனேன்*
*விழிப்புற்ற போதும்*
*வந்து வெடித்தன*
*குண்டுகள்.*
*மீண்டும் எண்ணத்*
*தொடங்கினேன்*
*இடையிற் சிரிப்பு வந்தது,*
*சிரித்தேன்.*
*விளையாட்டாகிவிட்டது*
*யுத்தம்..*
*அப்பாடா விடிந்து*
*வருகிறது.*
*இரவு எத்தனை*
*குண்டுகள்*
*என்றாள் மனைவி..*
*எழுந்தமானத்தில்*
*எழுபது என்றேன்*
*நேற்று எண்பது*
*ஏன் பத்துக் குறைந்தது*
*என்றாள்,,*
*நெடுங்கேணியில்தான்*
*நிற்கிறான் கேட்டுப் பார்*
*கேட்காமலா விடுவோம்?*

என களத்தில் உணர்வோடு நின்ற கவிஞர் அவர். கவிதை எழுத ஆரம்பித்தது தொட்டு இன்று வரை அவரது பாடு பொருளில் பெருமளவு மாற்றமில்லை. மானுடம் எங்கு வதைபடுகிறதோ, அங்கெல்லாம் அவர்களுடைய மொழியில் அவரது கவிதை பேசும். வதைபடுதல் ஒவ்வொரு இடத்தும் ஒவ்வொரு வகையாக வெளிப்படும் என்பது தவிர வேறொன்றுமில்லை.

## விடுதலைப் பாதையில் இணைவு:


தனது பதினான்காவது வயதில் கவிதை எழுத தொடங்கி, முப்பத்தேழாவது வயதில் விடுதலைப் பாதையில் தன்னை இணைத்துக் கொண்டு தீவிரமாக செயல்பட்டவர். போரியல் வாழ்க்கையின் மீதான அதி உன்னதமான நம்பிக்கைகளையும், அழகியலையும் தரும் உக்கிரமான கவிதைகளை எழுதிய கவிஞர் புதுவை இரத்தினதுரை

*அட மானுடனே!*
*தாயகத்தைக் காதலிக்கக்*
*கற்றுக்கொள்*
*பெற்ற தாய் சுமந்தது*
*பத்து மாதம்*
*நிலம் சுமப்பதோ*
*நீண்ட காலம்*
*அன்னை மடியில்*
*இருந்து கீழிறங்கி*
*அடுத்த அடியை*
*நீ வைத்தது*
*தாயகத்தின்*
*நெஞ்சில்தானே.*
*இறுதியில் புதைந்தோ*
*அல்லது எரிந்தோ*
*எருவாவதும்*
*தாய்நிலத்தின்*
*மடியில்தானே,*
*நிலமிழந்து போனால்*
*பலமிழந்து போகும்*
*பலமிழந்து போனால்*
*இனம் அழிந்து போகும்..,*
*ஆதலால் மானுடனே!*
*தாய்நிலத்தைக்*
*காதலிக்கக் கற்றுக் கொள்*


இத்தகைய மகத்தான சொற்களை வடித்து உணர்ச்சிகர கவிதையாக எழுதியவர் புதுவை. நீண்ட விடுதலைப் பயணத்தில் கடந்து வந்த பாதையின் வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமுமென மாறி மாறிய உணர்வுகளைக் கொண்ட காலங்களைக் கடந்து வந்துள்ளார் பெருங்கவி புதுவை.

## கடைசிவரை ஓயாத கவிஞன்:

அந்தக்கால உணர்வுகளின் குரலாக புதுவையின் படைப்புக்கள் பதிவு பெற்றுள்ளன. புதுவை இரத்தினதுரை கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் காலத்தின் குரல்கள் என்றே அவற்றை கூறலாம்.




கவிஞர் இணைத்துக் கொண்ட இலட்சிய வாழ்வும் அவரது படைப்புக்களில் சேர்ந்துள்ளது. இதனாலேயே அவரை 'காலத்தின் குரலாகப் பேசும்' கவிஞராக ஆக்கியது எனலாம். புதுவை இரத்தினதுரையின் அற்புதமான கவி ஆற்றலும், அனாயாசமான சொல்வளமும் அவரை பெரும் கவிஞர்களது வரிசையில் சேர்த்துள்ளது.




*இந்த மண் எங்களின்*
*சொந்த மண் - இதன்*
*எல்லைகள் மீறி*
*யார் வந்தவன்?*
*நிலைகள் தளர்ந்து*
*தலைகள் குனிந்து*
*நின்றது போதும்*
*தமிழா - உந்தன்*
*கலைகள் அழிந்து*
*கவலை மிகுந்து*
*கண்டது போதும்*
*தமிழா இன்னும்*
*உயிரை நினைத்து*
*உடலை சுமந்து*
*ஓடவா போகிறாய்*
*தமிழா*

என நெருப்பாக தொடங்கி நீளும் ஒரு பாடல் புதுவை இரத்தினதுரை உணர்ச்சி பொங்க எழுதியுள்ளார். அந்த பாடல் வரிகள் பாரிய தாக்கத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது

வியட்நாம் போராட்டம் நிகழ்ந்தபோது, ஒரு வியட்நாமியனாக அவர் கவிதை உணரச் செய்தது. சிலியில் அதிபர் ஆலண்டே கொல்லப்பட்ட




போது, சிலிக் குடிமகனாக அவரது கவிதை கோபம் கொண்டெழுந்தது. 1971ஆம் ஆண்டில் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட போது, அவர்களுடன் சேர்ந்து அவரது கவிதை அழுதது. யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப் போராட்டம் நடைபெற்ற போது, அந்தப் போராட்ட சக்திகளோடு இணைந்து அவருடைய குரல் ஒலித்தது. இப்படி களமாடுவதிலும், கவிதையாடுவதிலும் புதுவை கடைசி வரை ஓயவில்லை.

### தமிழ் இனத்தின் குரல்:

தமிழ் இனத்தின் சார்பாக புதுவையின் குரல் எப்போதும் கேட்டது. அவருடைய காலக் கவிதைகள் எப்போதும் சூடு தணியாமல் உணர்வை வைத்திருந்தன. இக்கவிஞன் கூறியது போல ‘இந்தப் போராட்டத்துக்கு என்னை ஒப்புக் கொடுத்திருக்கின்றேன். இந்தப் பணி முற்றுப் பெறும் போது, வேறு எங்கு வரை துயரக்குரல் கேட்கிறதோ, என்னுடைய கவிதைகளுமாக நான் அங்கு போய்ச் சேருவேன்’ என வியாசிக்கின்றார்.

*ஊர் பிரிந்தோம்*
*ஏதும் எடுக்கவில்லை*
*அகப்பட்ட*
*கொஞ்சம் அரிசி,*
*பருப்பு, இரண்டு பாய்,*
*இருமல் மருந்து,*
*மனைவியின்*
*மாற்றுடுப்பு மூன்று,*
*காற்றுப் போய்க்கிடந்த*
*மிதிவண்டி,*
*காணியுறுதி,*
*அடையாள அட்டை*
*அவ்வளவே,*
*புறப்பட்டு விட்டோம்.*
*இப்போ உணருகிறேன்*
*உலகில் தாளாத*
*துயரெது?*
*ஊரிழந்து போதல் தான்.*

இந்த கொடூர நிலை அரை நூற்றாண்டாக எங்கள் ஈழமண்ணில் தொடர்ந்தது.

### மானுட விடுதலை வேண்டி:

தமிழ் இன விடுதலை வேண்டியும்,அதி உச்ச எல்லையான மானுட விடுதலையை கோரிய கவிஞனை சாதாரணமான இலக்கியக் கோட்பாட்டுக்குள் சுருக்கிவிட இயலாது. ஏனெனில் புதுவை எப்போதும் களமும் கவிதையுமாய் வாழ்ந்தவர்.


போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவரும் புதுவை எனலாம். எங்கள் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் இலக்கிய இயக்கத்திற்குள் முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச்செய்ய உழைத்தவரும் அவரே. எங்கள் விடுதலைப்போராட்டம் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம் வரும். அவ்வேளையில் விடுதலைப் போராட்டம் கடந்து வந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்த போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும் சொல்லும் ஆய்வுக்கு புதுவையின் கவிதைகளே உசாத்துணையாகும்.

இதனாலேயே இவர் எழுதிய ‘பிட்டுக்கு மண் சுமந்த பெருமானார்’ என்ற ஆன்மிகப் பாடலை கூட இலங்கை இராணுவம் 2014 செப்டம்பரில் ஒலிபரப்புவதற்குத் தடை செய்து எதிர்கால வரலாற்றை மூடி மறைக்க ஆதிக்க அரசு எத்தனிக்கிறது.

புதுவை இரத்தினதுரையின் கவிதைகளில் பதுங்குகுழி வாழ்க்கைகளும், விமானத்தின் குண்டு வீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுகளும் அவரது கவிதைப் பொருளாயின. போர்க்கால படுகொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து கோபம் கொண்டு சாபமிட்டன புதுவை கவிதைகளும் தான். அழுதபடியே சேர்ந்து வந்தன வரிகள். ஆனால், நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல்களாய் மீள மிளிர்ந்தன. பொருட்தடை, மருந்துத்தடை, போக்குவரத்துத் தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம்மக்களுடன் சேர்ந்திருந்தன துயரத்தை கூறியழும் புதுவையின் கவிதைகள்.

வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலைத் தியாக வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும் தான்.

*சும்மா காற்றில் பற்றியா*
*இந்தத் தீ மூண்டது?*
*இந்த அனல் பிடித்தெரிய*
*எத்தனை காலம் பிடித்தது*
*எத்தனை பேரைத் தீய்த்து*
*இந்த தீ வளர்த்தோம்*
*எத்தனை பேரை நெய்யாக*
*வார்த்தோம்...,*
*அணைய விடக்கூடாது*
*ஊதிக்கொண்டேயிரு*
*பற்றியெரியப் போகுதெனப்*
*பதறுவர்*
*ஊதுவதை நிறுத்தி விடாதே.*
*இந்தத் தீயின்*
*சுவாலையிற்தான்*
*மண் தின்னிகள் மரணிக்கும்..*




இத்தகைய கவிப்படைப்பின் மூலம் ஈழத் தமிழ்மக்களை போராட்ட களத்திற்கு செல்ல வழியமைத்தவர் புதுவை இரத்தினதுரை.

### களத்தில் மலர்ந்தவை பாடல்கள்:

இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன. அப்போது 1989 இல் வெளிவந்த ஒலிநாடாவான ‘களத்தில் மலர்ந்தவை’ ஈழமெங்கும் எட்டுத் திசையிலும் ஒலித்த பாடல்களாகும். அத்தோடை புதுவை எழுதிய பாடல்களில் இந்த மண் எங்களின் சொந்த மண், வேர்கள் வெளியினில் தெரிவதில்லை, காவலரண் மீது காவலிருக்கின்ற ஆசை மகளே, பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே,

காலநதி ஓடுகின்ற கரையில் வீசும்




காற்று, தீயினில் எரியாத தீபங்களே, சங்கு முழங்கடா தமிழா என்றும் தமிழர் மனங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும். ஈழ விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனிடமும் கவிதை மூலமாக உணர்வூட்டினார் புதுவை இரத்தினதுரை. மனித நேயமுள்ள உலகத்து மனிதர்களிடம் உரத்து கூவினார். நெஞ்சு வெடித்து இனத்துக்காகக் கதறிய புதுவையை போர் மௌனித்த 2009 மே19 இற்குப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டார். எங்கள் மக்களுக்காக ஓங்கி ஒலித்த இந்த கவிஞனுக்கு என்ன சொல்ல போகிறது இந்த உலகம் ?

மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கும், அவர்களின் விடுதலைக்குமாக, பயணித்து, சர்வ தேசியம். கவிதைப் பயணம் மூலமாக மட்டுமல்ல, களப் பணியாலும் வளப்படுத்திய பாப்லோ நெருடா, நசீம் இக்மத், வால்ட் விட்மன், பாலஸ்தீனக் கவிஞன் மக்மூத் தார்வீஷ், கருப்பினக் கவிஞன் லாஸ்டன் ஹியூஸ் இவர்களின் திசைவழியில் புதுவை இரத்தினதுரையும் பயணிக்கிறார் என்றால் மிகையாகாது.

பொழில்

காணாமல் போன என் மகனே!!
என் கருப்பையின் ஓலம்
அது
காற்றெங்கும் விரவிக்
கிடக்குதய்யா!
நாள் முழுக்க படபடப்பு!
தீராத ஏக்கம்
பரிதவிப்பு.
சாரலின் துளியிலும்
உன் விலாசத்தைத் தேடும் - இந்தத்
தாயின் தவிப்பு.!!

ஒவ்வொரு சனமும்
தட்டியெழுப்புது
உன்
பிள்ளைப் பராய நினைவுகளை!!

விரல் பிடிச்சு நீ நடந்ததும்
கால் தடுக்கி விழுந்ததும்
மீசை வைச்ச குழந்தையாய் - இந்த
அம்மா மடியில் படுத்ததும்.
சுற்றம் முற்றம்
புடைசூழ
திருவிழாவில் கலந்ததும்
கண்முன்னே நிழலாடும்!!
உன் முகம் காணும்
தவிப்பு சூழும்.!
கண்கள் கடலாகும்.!

கவளம் சோறும்
தொண்டையில் இறங்காது ராசா
பஞ்சடைந்த என் கண்கள்
வீதியையே பார்த்திருக்கும்.!
தொலைவிலே தெரியும்
தபாற்காரன்கூட
கடவுளே இறங்கி
வீதியால் வருமாப்போல்
கண்ணுக்குத் தெரியும்..!
உன்..
கையெழுத்தில் - ஒரு
கடிதாசி
வருகுதென
மனங்கிடந்து அடிச்சுக் கொள்ளும்!!

அம்மா!
நான் சுகம் என்று
ஒரு வரி போதும்!!
மோனே..!!
கிடாவெட்டி பொங்கலிட்டு
ஊர்கூட்டி விருந்து வைப்பேன்.!!

நீ வரவே மாட்டாய் எண்டு
ஊரில கொஞ்சக்
குறுக்கழிவார்
சொல்லித் திரியிறாங்கள்..
நான் நம்பேல்லை!!
தலைகுனிந்து கடந்த
தபால்காரனுக்கும் ஏதும்
சமுசயமோ?
என்னை கண்கொண்டும் பாக்கேல்லை
உன்னை
பிடிச்சுக் கொண்டு போன பாவிமக்கள்
உன்னை என்ன செய்தவங்கள்..?

என்னைப் பெத்த ராசா..!!
எங்கய்யா இருக்கிறாய்..?
என்ன பாடு படுகிறாய்?

உன்னோட படிச்சவன்,
உன் சினேகிதன்..
லண்டனில இருந்து
குடும்பமா வந்தான்..
ஆறுதலா நாலு
வார்த்தை சொன்னான் -அவனுக்கு
வடிவான ரெண்டு
பெண்புரசுகள்..!!

'என்ரை பெண்ணழகிக்கு
பின்னாளில்
உன்ரை
பேர்தானெணை வைப்பன் அம்மா!'
நீ சின்னனில சொன்னது
ஞாபகத்துக்கு வந்து
என்னைத் தேம்பியழ வைச்சுது!!

பகலெல்லாம் உன்னைத்
தேடித் திரிவன்..
இரவுகளில என்ரை
கண்கள் இப்ப
ஒத்துழைக்க மாட்டுதாம்..
காலுகளும் சோர்ந்துபோம்..
ஆனாலும்..
நித்திரைக்கும் எனக்கும்
வெகுதூரம்

உன் காலடி ஓசை
கேக்குமாப் போல
ஒரு பிரமை
ரா முழுக்க காதுகள்
கூர்மையா இருக்கும்.
நிலவு வெளிச்சத்தில
யன்னல் கம்பியெல்லாம்
சிறைக் கதவுகளா
பெரிசு பெரிசாத் தெரிஞ்சு
துணுக்குற வைக்கும்.

ராசா..!!
அம்மாவுக்கு இப்ப
நடைதளர்ந்து மூப்பு வந்திட்டுது..
கண் மங்கலாப் போகுது.
மோனை!! என்ரை செல்லமே!
சித்தம் கலைய முந்தி
கண்ணாரக் கண்டு உன்னைக்
கட்டியணைக்க..
ஒரு வாய் சோறேனும்
என்ரை கையால தீத்திவிட.
துவளும் இருதயத்தை
இழுத்து வைச்சிருக்கிறன்
எங்கை ஐயா இருக்கிறாய்?
எப்ப நீ வரப்போறாய்?

# எப்ப நீ வரப்போறாய்?

(காணாமல் ஆக்கப்பட்டோர் நினைவாக எழுதப்பட்டது)





டிலக்ஷி

# மலைகளை அசைக்கும் பெண்கள்!

அன்றாடப் பணிகளின்போது சற்றே இளைப்பாறப் பலருக்கும் ஒரு கோப்பைத் தேநீர் கைகொடுக்கும். விளம்பரங்களிலும் நேரிலும் கண்ணுக்குப் பசுமையாகக் காட்சியளிக்கும் தேயிலைத் தோட்டங்கள், உண்மையில் அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சுமையாக மட்டுமே காட்சிதருகின்றன.

**பெண்கள் மலைகளை நகர்த்தும் அளவு வலிமை உடையவர்கள். இன்று நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் கூட பல பெண்கள் மலையை நகர்த்தும் அளவு வலிமை கொண்டவர்களாகத் திகழ்வது வருங்கால சமுதாயம் கடின உழைப்பாளி மற்றும் தைரியமான குடிமக்களை உருவாக்க ஒரு காரணமாக அமையும். ஏனென்றால் ஒரு நாள் அவர்கள் தாயாக ஒரு தலைமுறையைப் பெற்றெடுப்பார்கள். உலகப் பெண்கள் சாகச மலைப் பயணங்களிலும், நம் சமுதாயத்தை முன்னிறுத்தி இன்ன பிற வியங்களிலும் கலந்து கொண்டாலும், நமது சமுதாயத்தின் பின்தங்கிய நிலையால் கிராமத்தின் பின்பகுதியில் வாழ்கிறார்கள் என்று சொல்வது சரிதான்.**

தேயிலை என்றதும் முதலில் நினைவில் வருவது தேயிலையின் தேசமாக விளங்கும் மலையகம் தான். உலகின் பல நாடுகளில் வாழும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் ஒற்றுமைக் குரலை ஒரே தினத்தில் எழுப்புவதற்காக டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி சர்வதேச தேயிலைத் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரேஸில் நகரில் இடம்பெற்ற உலக சமுக மாமன்ற மாநாட்டிலேயே தேயிலைத் தினமொன்று கொண்டாடப்பட வேண்டும் என்றும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அது அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. அதற்கமைய அதன்படி அவ்வாண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி முதலாவது சர்வதேச தேயிலைத் தினம் இந்திய தலைநகர் புது டில்லியில் உள்ள இந்திய அரசியலமைப்பு கழக மண்டபத்தில் (Indian Constitutional Club) இடம்பெற்றது.

இன்று நான் இந்த தேயிலை தினத்தை அலங்கரிக்கும் தேயிலை தேசத்து ராணிகளை பற்றித்தான் எடுத்துரைக்கப்





போகிறேன். அது அவர்களுக்காக மட்டுமல்ல, ஒட்டுமொத்த பெண்களுக்காகவுமே தெரிவு செய்தேன்.

என் கருத்துப்படி, சமுகத்தில் ஆண்களுடன் ஒப்பிடும்போது, பெண்களை பலவீனமான தரப்பினராகக் கருதக்கூடாது அல்லது அத்தகைய மனநிலையை பெண்களுக்குக் கற்பிக்கக்கூடாது. இந்திய துணைக் கலாச்சாரத்தில், ஆணாதிக்க மனநிலையுடன் நமது சமுகத்தில் முன்னேற வேண்டும். அதற்கு தேயிலை தோட்டத்து பெண்கள் முன் வைக்கும் சவால்களும், அதன் மூலம் அவர்கள் பெறும் சாதனைகளும் வருங்கால பெண்களுக்கு முன்மாதிரியாக அமைகிறது.

பெண்கள் மலைகளை நகர்த்தும் அளவு வலிமை உடையவர்கள். இன்று நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் கூட பல பெண்கள் மலையை நகர்த்தும் அளவு வலிமை கொண்டவர்களாகத் திகழ்வது வருங்கால சமுதாயம் கடின உழைப்பாளி மற்றும் தைரியமான குடிமக்களை உருவாக்க ஒரு காரணமாக அமையும். ஏனென்றால் ஒரு நாள் அவர்கள் தாயாக ஒரு தலைமுறையைப் பெற்றெடுப்பார்கள். உலகப் பெண்கள் சாகச மலைப் பயணங்களிலும், நம் சமுதாயத்தை முன்னிறுத்தி இன்ன பிற விஷயங்களிலும் கலந்து கொண்டாலும், நமது சமுதாயத்தின் பின்தங்கிய நிலையால் கிராமத்தின் பின்பகுதியில் வாழ்கிறார்கள் என்று சொல்வது சரிதான்.

மகிழ்ச்சியான மற்றும் பங்களிக்கும் சமுகத்தை உருவாக்க இது ஒரு காரணமல்ல. எனது கருத்துப்படி, எதிர்காலத்தில் ஒரு கிராமப்புற சமுதாயத்திற்கு சமுகத்தை வலுப்படுத்த வேண்டுமானால், அதற்குப் பெண்களை ஊக்குவிக்க சமுகம் உறுதியளிக்க வேண்டும். சர்வதேச தேயிலை தினத்தை நினைவில் கொண்டே எனது இந்த சிறிய கட்டுரை எழுதப்பட்டுள்ளது.



இலங்கையின் பொருளாதாரத்தை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பவர்களில் பெண்களின் பங்கே அதிகமாக இருக்கின்றது. வெளிநாடுகளில் வீட்டுப் பணிப் பெண்களாக, ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோராக, மற்றும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்ற பெண் தொழிலாளர்கள் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் வருமானம் என்பன முக்கியமாகும். எமது ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் மொத்த தேசிய உற்பத்தியிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பாரிய பங்களிப்பை செலுத்துகிறது. அதாவது ஏற்றுமதி வருமானத்தில் மிகமுக்கிய பங்கை வகிக்கிறது. இன்றைய டிஜிட்டல் யுகத்தில் பெண்களின் வகிபாகம் முக்கியத்துவம் பெறுகிறது. வீட்டு வேலைகள் தொடக்கம் விளம்பரம் வரை பெண்களே முன்னிலை வகிக்கிறார்கள். இன்று பெண்கள் பல துறைகளில் முன்னேற்றமடைந்து தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. பெண்கள் வேலைசெய்யாத துறைகளே இல்லையென்றே கூறலாம். ஆனால் இந்த வாய்ப்புகளும் வசதிகளும் உலகிலுள்ள எல்லாப் பெண்களுக்கும் கிடைத்துள்ளதா என்பதை நோக்கும்போது பல்வேறு விடயங்களில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பெண்கள் பின் தங்கியிருப்பதைக் காணலாம்.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு அதிகளவு பங்களிப்பை வழங்கிவரும் பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் தற்போது பல்வேறு பிரச்சினைகளையும் பாதிப்புக்களையும் எதிர் நோக்கியுள்ளனர். தேயிலை உற்பத்தித் துறையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்கள் சுமார் 200 வருடங்களுக்கு மேல் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பினை செய்து வருகின்றனர். இந்நிலையில் நம் தேயிலை தேசத்து பெண்கள் மலையை அசைக்க வல்லவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ■

**பெண்கள் மலைகளை நகர்த்தும் அளவு வலிமை உடையவர்கள். இன்று நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் கூட பல பெண்கள் மலையை நகர்த்தும் அளவு வலிமை கொண்டவர்களாகத் திகழ்வது வருங்கால சமுதாயம் கடின உழைப்பாளி மற்றும் தைரியமான குடிமக்களை உருவாக்க ஒரு காரணமாக அமையும். ஏனென்றால் ஒரு நாள் அவர்கள் தாயாக ஒரு தலைமுறையைப் பெற்றெடுப்பார்கள். உலகப் பெண்கள் சாகச மலைப் பயணங்களிலும், நம் சமுதாயத்தை முன்னிறுத்தி இன்ன பிற வியங்களிலும் கலந்து கொண்டாலும், நமது சமுதாயத்தின் பின்தங்கிய நிலையால் கிராமத்தின் பின்பகுதியில் வாழ்கிறார்கள் என்று சொல்வது சரிதான்.**

# அசேரியா – பண்டைய நாகரீகத்தின் அடையாளம்

## மத வன்முறையால் அழிக்கப்படும் அசேரிய மக்களும், சிதைக்கப்படும்பழமையானவரலாற்று மையங்களும்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா




ஈராக்கில் ஒரு தனித்துவமான இனமாக 'அசேரியர்கள்' (Assyrian) கருதப்படுகின்றனர். இருப்பினும் உத்தியோக பூர்வ ஈராக்கிய புள்ளி விபரங்கள் அவர்களை அரேபியர்கள் என்றே கருதுகின்றன.

### பண்டைய மெசொப்பொத்தேமியா :

பண்டைய மெசொப்பொத்தேமியா மக்களின் வழித்தோன்றல்கள், அசேரியர்கள் அராமை ( Aramaic) மொழியை பேசுகிறார்கள். அத்துடன் அசேரிய மக்கள் கல்தேயன்,சிரிய மரபுவழி, நெஸ்டோரியன் மற்றும் சிரிய கத்தோலிக்கம் ஆகிய நெறிமுறைகளை பின்பற்றுகின்றனர்.

பண்டைக் காலத்தில் அசேரியா என்பது, டைகிரிஸ் ஆற்றின் மேற்பகுதியைச் சார்ந்த ஒரு நிலப்பகுதியைக் குறித்தது. அசேரியர்கள் ஒரு தனித்துவமான சமூகத்தை உருவாக்குகி வாழ்ந்தார்கள். இப் பகுதியில் பழங்காலத் தலை நகரமாக விளங்கிய அசூர் என்னும் நகரின் பெயரைத் தழுவியே அசேரியா என்னும் பெயர் ஏற்பட்டது.

பிற்காலத்தில் அசேரியா, பண்டைய மெசொப்பொத்தேமியா, பண்டைய எகிப்து, அனத்தோலியாவின் பெரும்பகுதி ஆகியவற்றைக் கட்டுப்படுத்திய பெரிய பேரரசாக விளங்கியது. எனினும் முறையான அசேரியா என்பது மெசொப்பொத்தேமியாவின் வட பாகத்தையே குறித்தது. இப்பகுதி நினிவேவைத் தலைநகரமாகக் கொண்டிருந்தது. தென்பகுதி பபிலோனியா எனப்பட்டது.

### வரலாற்றுச் சூழல்:

ஆயினும் மங்கோலியப் படையெடுப்புகளால் அசேரியரின் வழிபாட்டு தேவாலயங்கள் பல அழிந்துவிட்டன. அதன் பின் அசேரியர்கள் அண்டை நாடான குர்திஷ் பழங்குடியினருடன் இணைந்து வாழ்ந்தனர்.

ஐரோப்பிய காலனித்துவ ஊடுருவல் மற்றும் கிறிஸ்தவ மத பரம்பல் ஆர்வத்தின் விளைவாகவும்,சுன்னி – ஆர்மேனிய பதட்டங்களாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசேரியர்களே தொடர் துன்புறுத்தலுக்கு உள்ளாகினர்.


### ஆர்மேனிய இனப் படுகொலை:


1915 ஆம் ஆண்டில், அசேரியர்கள் ஆர்மேனியர்களை படுகொலை செய்யத் தொடங்கிய ஓட்டோமான்களுக்கு எதிராக, ரஷ்யப் படைகளால் கிளர்ச்சி செய்ய ஊக்குவிக்கப்பட்டனர்.

1917 இல் ஜாரிஸ்ட் ரஷ்யாவின் சரிவுடன் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு தெற்கு நோக்கி அணிவகுத்துச் செல்லஎஞ்சிய 25,0000 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஈராக்கில் குடியேறினர். முதலாம் உலகப் போருக்குப் பிறகு அசேரியர்கள் அவர்கள் விரும்பியபடி ஹக்காரிக்குத் திரும்புவது சாத்தியமற்றது. அவர்கள் அங்கு அனுபவித்து வந்த சுயாட்சி மறுக்கப்பட்டது. மேலும் அரபு அரசாங்கத்திற்கும் இடையே அவநம்பிக்கை அதிகரித்தது.

### ஈராக் சுதந்திரத்தின் பின்னர்:

அசேரியர்கள் 1932 இல் ஈராக் பெற்ற சுதந்திரத்தை பிரிட்டிஷ் அரசு தம்மை காட்டிக்கொடுப்பாகக் கருதினர். அதனைத் தொடர்ந்து






வளர்ந்து வந்த பதற்றம் 1933 இல் ஒரு பாரிய மோதலுக்கு வழிவகுத்தது. அதைத் தொடர்ந்து ஈராக் இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட தொடர்ச்சியான படுகொலைகள். இதில் 600 முதல் 3,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

பல அசேரியர்கள் அமெரிக்காவிற்குப் புகலிடந் தேடிப் புறப்பட்டனர், ஆனால் பெரும் பகுதியினர் ஈராக் உள்ளேயே தங்கியிருந்தனர். இதன் பின் உள்நாட்டில் குர்திஷ் மோதலைத் தவிர்க்க அசேரியர்களால் முடியவில்லை.

அக்காலத்தில் குர்துகளைப் போலவே, சிலர் ஈராக்கிய அரசாங்கத்தை ஆதரித்தனர். மற்றவர்கள் குர்திஷ் தேசியவாத இயக்கத்துடன் தங்களை இணைத்துக் கொண்டனர். 19%9 இல் பல சிறிய கட்சிகள் இணைந்து அசேரியர் ஜனநாயக இயக்கத்தை (ADM) உருவாக்கி, 1982 இல் குர்திஷ் ஆயுதப் போராட்டத்தில் முறையாக இணைந்தனர்.

## 1988 இரசாயன தாக்குதல்:

1988 ஆம் ஆண்டு அன்ஃபால் இரசாயன தாக்குதலில் குர்துகளைப் போலவே அசேரியர் கிராமங்களும் மக்களும் பாரிய அளவில் பாதிக்கப்பட்டனர். ADM குர்திஸ்தான் முன்னணியின் ஒரு பகுதியாக இருந்து, 1992 குர்திஸ்தான் தேர்தலில் பங்கேற்றது.

ஐந்து இடங்கள் அசேரியர் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்டது.

ஈராக் அரசியலமைப்பில் அசேரியர் அங்கீகாரம், முழு கலாச்சார உரிமைகள், மற்றும் சமத்துவம் ஆகியவற்றை ADM கோரியது. குர்துகள் ஒரு கூட்டாட்சி அரசை அடைந்தால், அசேரியர்கள் அதற்குள் சுயாட்சியைக் கோரினார்கள். ஆனால் பிரிந்து செல்வதற்கான பரவலான விருப்பமும் இருந்தது.

## சதாம் ஹுசைனின் இனப்படுகொலை;

குறிப்பாக சதாம் ஹுசைனின் இனப்படுகொலையான அன்ஃபால் தாக்குதலில் மற்ற கிறிஸ்தவ சிறுபான்மையினருடன் அசேரியர்களும் பாதிக்கப்பட்டனர். 1988 இல் தொடங்கப்பட்ட இந்த கொடூரத்தின் விளைவாக சுமார் 100,000 பேர் கொல்லப்பட்டனர், அல்லது கட்டாயமாக காணாமல் போயினர். பெரும்பாலும் குர்துகள், உட்பட பல்வேறு சிறுபான்மையினரைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

## அரேபிய மயமாக்கல் கொள்கை:

இக்கோரங்களின் பின்னர், காணாமல் போனவர்கள், மற்றும் கொலைகள், அரபுமயமாக்கல் கொள்கை என்பன சிறுபான்மையினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக்கொள்ள அதிகாரபூர்வமாக கட்டாயப்படுத்தியது.

ஈராக்கில் 1987 மற்றும் 1997 தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்புகள் அனைத்து அசேரியர்களும் அரபு அல்லது குர்திஷ் அடையாளத்தை தேர்வு செய்ய கட்டாயப்படுத்தியது. அசேரியர் என அடையாளப்படுத்த வலியுறுத்தியவர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர் அல்லது தன்னிச்சையாக அரபு அல்லது குர்து என பதிவு செய்யப்பட்டனர்.

2001 ஆம் ஆண்டில், ஆணை 199 ஒவ்வொரு ஈராக்கியருக்கும் தங்கள் இன அடையாளத்தை மாற்றுவதற்கும் அரேபியரைத் தேர்ந்தெடுப்பதற்கும் 'உரிமையை' அறிவித்தது. நூறாயிரக்கணக்கானோர் வலுக்கட்டாயமாக இடம்பெயர்ந்தனர், குறிப்பாக கிர்குக்கைச் சுற்றியுள்ள பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் சிறுபான்மையினரை தங்கள் இன அடையாளத்தை மாற்றிக்கொள்ள அதிகாரபூர்வமாக கட்டாயப்படுத்தியது.

"சதாம் ஹுசைனின் இனப்படுகொலையான அன்ஃபால் தாக்குதலில் மற்ற கிறிஸ்தவ சிறுபான்மையினருடன் அசேரியர்களும் பாதிக்கப்பட்டனர். 1988 இல் தொடங்கப்பட்ட இந்த கொடூரத்தின் விளைவாக சுமார் 100,000 பேர் கொல்லப்பட்டனர், அல்லது கட்டாயமாக காணாமல் போயினர். பெரும்பாலும் குர்துகள், உட்பட பல்வேறு சிறுபான்மையினரைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்."

## 2003 அமெரிக்கபடையெடுப்பு:

அமெரிக்காவின் மார்ச் 2003 படையெடுப்பிற்குப் பிறகு ஈராக்கைப் பற்றிக்கொண்ட இன மற்றும் குறுங்குழுவாத உள்நாட்டுப் போரின் போது இன மற்றும் மத சிறுபான்மையினரான அசேரியர்கள் இரட்டிப்பாக இலக்கு வைக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் மார்ச் 2003 ஆக்கிரமிப்புப் போரினால் இடம்பெயர்ந்த மில்லியன் கணக்கான ஈராக்கியர்களில் அசேரியர்கள் பாரிய அளவில் இடம்பெயர்ந்தனர்.

அத்துடன் கொலைகள், குண்டுவெடிப்புகள், கடத்தல்கள், சித்திரவதைகள், துன்புறுத்தல்கள், கட்டாய மதமாற்றங்கள் மற்றும் வெளியேற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டனர்.

அசேரியர் தேவாலயங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் வீடுகளும் குறிவைக்கப்பட்டன. இலக்கு வைக்கப்பட்ட



கிறிஸ்தவப் பகுதிகளில் இருந்ததால், வெளிநாட்டு நிறுவனங்களில் பணிபுரிந்ததால் அல்லது உத்தியோகபூர்வ அல்லது தொழில்முறை பதவிகளை வகித்ததால், மக்கள் கடத்தப்பட்டனர் அல்லது தாக்குதல்களில் கொல்லப்பட்டனர். இதில் அரசு ஊழியர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் மத தலைவர்கள் அடங்குவர்.

## அசேரியர்நிறுவனங்கள் குறிவைக்கப்பட்டன:

உயர் பதவிகளில் உள்ளவர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் பணிபுரிந்த கிறிஸ்தவ அசேரியர்கள் குறிப்பாக ஆபத்தை எதிர் நோக்கினர். 22 செப்டம்பர் 2005இல் அசேரிய ஆர்வலரும் முன்னாள் ஈராக்கிய இடம்பெயர்வு அமைச்சருமான பாஸ்கேல் வார்தாவைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட ஆறு அசேரியர் பாதுகாப்புக் காவலர்களை ஏற்றிச் சென்ற டிரக் மீது



துப்பாக்கி ஏந்திய நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆறு பேரில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

2005 நவம்பரில் மொசூலில் துப்பாக்கி ஏந்தியவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் கிறிஸ்தவ அரசியல் கட்சியான அசேரியர் ஜனநாயக இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர், மற்றும் இருவர் காயமடைந்தனர் என்று மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேபோல் ஏப்ரல் 2008 இல் அசேரியர் ஆர்த்தடாக்ஸ் பாதிரியார் ஃபாதர் அடெல் யூசுப் மத்திய பாக்தாத்தில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

## அசேரியர் நிலங்கள் அபகரிப்பு:

2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் ஈராக்கின் நினேவா பகுதியில் அசேரியர் சுயாட்சி, அல்லது சுய-நிர்வாகத்திற்கான உந்துதலைக் கண்டது.

இத்தகைய முயற்சி அசேரியர்களை மேலும் பாதுகாப்பின்மைக்கு ஆளாக்கக்கூடும் என்றாலும், பிராந்திய குர்திஷ் அரசாங்கம் ஒரு புதிய மாகாணத்திற்கான இந்த நடவடிக்கையை ஆதரித்தது.

இது ஈராக்கில் இருந்து பிரிந்து செல்லும் குர்திஷ் விருப்பத்தை வலுப்படுத்தும் என்பதால். இதற்கிடையில், குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கம் வடக்கு முழுவதும் அசேரியர் நிலங்களை அபகரித்தது ஏன் என்று புரியவில்லை.

அக்டோபர் 2010 இல், பாக்தாத்தில் உள்ள அவர் லேடி ஆஃப் சால்வேஷன் சிரியாக் கத்தோலிக்க தேவாலயத்தின் மீதான தாக்குதல் அசேரியர் சமூகத்தில் அதிர்ச்சி அலைகளை அனுப்பியது.

ஈராக்கில் அல்-கொய்தாவுடன் தொடர்புடைய அமைப்பால் நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 56 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 78 பேர் காயமடைந்தனர். தாக்குதலுக்குப் பிறகு, 1,000 க்கும் மேற்பட்ட அசேரிய கிறிஸ்தவ குடும்பங்கள் பாக்தாத்தில் இருந்து வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.

## 2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசின் கொடூரம்:

2014 இல் ஈராக்கில் இஸ்லாமிய அரசினால் (ISIS) அசேரியர்களுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தியது. 2014 ஆம் ஆண்டு மொசூல் நகரை ஐகுஐகு கைப்பற்றியதால் நூற்றுக்கணக்கான அசேரிய கிறிஸ்தவ குடும்பங்கள் குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் (KRG) கட்டுப்பாட்டில் உள்ள நினிவா சமவெளி மற்றும் பகுதிகளை நோக்கி தப்பி ஓடியனர். மீதமுள்ள கிறிஸ்தவ குடும்பங்கள் இஸ்லாத்திற்கு மாற வேண்டும், ஜிஸ்யா (முஸ்லிம் அல்லாதவர்களுக்கு விதிக்கப்படும் அஞ்சலி) அல்லது கொல்லப்பட வேண்டும் என்று இறுதி எச்சரிக்கையைப் பெற்றன.

ஜூலை 2014 க்குள், கிட்டத்தட்ட அனைத்து அசேரிய கிறிஸ்தவ குடும்பங்களும் நகரத்தை விட்டு வெளியேறின. ஐ.எஸ்.ஐ.எஸ் மொசூலில் உள்ள கிறிஸ்தவ வீடுகளை அரபு எழுத்து ('நசரேன்' என்பதற்கு) கொண்டு குறியிட்டு, அவற்றை இஸ்லாமிய அரசின் சொத்தாக நியமித்து, அவற்றினை கொள்ளையடித்தது.

## ஐஎஸ்ஐஎஸ் கட்டுப்பாடும் கொடூரமும்:

ஆகஸ்ட் 2014 இல் டெல் இஸ்கோஃப், பர்டல்லா, கரம்லெஸ், பட்னாயா, டெல் கீஃப் மற்றும் ஈராக்கின் மிகப்பெரிய கிறிஸ்தவ நகரமான கராகோஷ் உட்பட நினிவா சமவெளிகளில் உள்ள அனைத்து அசேரியர்களின் பகுதிகளையும் ஐஎஸ்ஐஎஸ் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. சுமார் 200,000 பேர் குர்திய KRG பகுதியை நோக்கி ஓடியதால், இது இரண்டாவது அலை இடப்பெயர்வை ஏற்படுத்தியது. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் அசேரியர் குடும்பங்களை தங்கள் பகுதிகளில் இருந்து தப்பிச் செல்லும்போது கொள்ளையடித்தனர். அவர்களின் பணம், கார்கள், நகைகள் மற்றும் அடையாள ஆவணங்கள் என்பனவற்றைப் பறிமுதல் செய்தனர். அத்துடன் தப்பி ஓடிய அசேரியர்களின் வீடுகள் மற்றும் பண்ணைகளையும் சூறையாடினர்.

அசேரியர்கள் தங்கள் வரலாற்று, கலாச்சார மற்றும் மத பாரம்பரியத்தை வேண்டுமென்றே இஸ்லாமிய அரசு அழித்தமையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

## பழமையான வரலாற்று தளங்களை அழிப்பு;

2014 இல் தொடங்கிய IS-IS கொடூரம் பல அசேரியர் தேவாலயங்கள், கல்லறைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான வரலாற்று தளங்களை அழித்தது. இவற்றுள் திக்ரித்தில் உள்ள அசேரியர்ன் பசுமை தேவாலயம், ஹத்ராவின் பண்டைய நகரம் மற்றும் வரலாற்று அசேரியர் தலைநகரான நிம்ருத் ஆகியவை அடங்கும். இந்த குழு மொசூல் அருங்காட்சியகத்தில் உள்ள ஏராளமான தொல்பொருட்களையும் அழித்தது, அவற்றில் பெரும்பாலானவை அசேரியர் நாகரிகத்துடன் தொடர்புடையவை ஆகும்.

## அசேரியர்கள் புலம்பெயர்வு:

கொடூரமான வன்முறையில் இருந்து தம் உயிரைப் பாதுகாப்பதில் பல அசேரியர்கள் புலம்பெயர்வதைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களின் சமூக கட்டமைப்பு அளவு தொடர்ந்து சுருங்கி வருகிறது. ஈராக்கில்2003 க்கு முன்பு இருந்ததை விட இப்போது ஒரு சிறிய பகுதியாக உள்ளது.

குறிப்பாக பாக்தாத்தில் தொடர் குண்டுவெடிப்புகள் மற்றும் கடத்தல்கள் அடிக்கடி நிகழ்வதுடன், மதவெறியின் துன்புறுத்தல்களுக்கும் ஆளாகின்றனர். குர்திஸ்தான் பிராந்தியத்தில், பாதுகாப்பு நிலைமை சாதாரணமாகசிறப்பாக இருந்தாலும், குர்திஷ் அதிகாரிகளால் தங்கள் அரசியல் செயல்பாடுகள் அடக்கப்படுவதாக அசேரியர்கள் அடிக்கடி தெரிவிக்கின்றனர்.

இரண்டு மேலாதிக்க குர்திஷ் கட்சிகளின் அரசியல் நோக்கங்களை ஆதரிக்க அசேரியர்கள் மற்றும் பிற சிறுபான்மையினர் மீது அழுத்தம் கொண்டு வரப்பட்டு உள்ளது, மேலும் அசேரியர்களுக்குச் சொந்தமான நிலங்களில் சட்டவிரோத குர்திஷ் கட்டுமான நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்கின்றன எனவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

## அரைத்-தன்னாட்சி பாதுகாப்பான பகுதி:

சமீபத்தில், சில அசேரியர் குழுக்கள், குறிப்பாக புலம்பெயர்ந்த நாடுகளில், நினிவா சமவெளிகளில் சிறுபான்மையினருக்கான அரைத்-தன்னாட்சி 'பாதுகாப்பான பகுதி'க்கான முன்மொழிவின் பின்னால் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

ஈராக் அரசாங்கம் மற்றும் ஓகீஎ இரண்டின் மீதும் உள்ள அவநம்பிக்கையின் காரணமாக, இந்த சர்வதேசப் பாதுகாப்பின் சில கூறுகளை பலர் பரிந்துரைக்கின்றனர். இந்தத் திட்டத்தில், சிறுபான்மையினருக்கு முந்தைய ஏற்பாட்டிற்கு மாறாக, தங்கள் சொந்த பாதுகாப்பை நிர்வகிக்கும் அதிகாரமும் வழங்கப்படும்.

இதன் மூலமே அசேரிய மக்கள் தங்கள் பண்டைய நாகரீக சிறப்புடன் சுயநிர்ணயத்துடன் வாழ முடியும் என கருதுகின்றனர்.



# கடனும் தற்கொலைகளும்!

‘கடன்’ என்ற
பொல்லாச் சொல்லில்
அகப்பட்டு
நம்மவர் பாடோ சொல்லடங்கா
வேதனைகள்!!

தம் குடும்பம் காக்க
தலைமேல்
‘கடன்’ அணைகட்டி
தள்ளாடுகின்றனர்..!

மனித வாழ்வியலில்
இன்றைய பொருளாதார
விலை வாசிகள்
பணத்தாக்கத்தை
வரையறுக்கின்றன.

பட்டினியால்
தம் வயிறாற – ஒருசிலர்
‘கடன்’ என்ற
பாதாளத்தில் சிக்கி
தடம் புரள்கின்றனர்.
அது போதாதென்று.
ஆடம்பரமாய் அரங்கேற்றம்
காணத் துடிக்கும்
இன்னொரு வர்க்கத்தினர்


கடன் உதவியாம் – என்று
வங்கிகளும் அடுக்கிக் கொடுக்க
அடுக்கு மாடிகளும்,
சொகுசு வண்டிகளுமாய்
எம்மவர் சிலர் ஆட்டம் போடுவர்.

மாதாந்த கடன்
செலுத்தும் தவணையில்,
மன அழுத்தம் என – சிலர்
தவறணையில் – சிலர்
தற்கொலை என்றெல்லாம்
ஆயுளை
வெட்டியாக்குகின்றனர்..!
கடன் என்ற அரக்கனால்
பல குடும்பங்கள்
சின்னா பின்னமானது
கேட்டதில்லையா? – அல்லது
பார்த்தது இல்லையா?

மனிதா!!
சற்று சிந்தனை கொள்வோம்!
ஆடம்பரம் தவிர்த்து
அத்தியாவசியம் கடைப்
பிடிப்போம்!

கடன் என்ற மாயை
நம்மை நெருங்காதவரை
எம்மோடு சேர்த்து நம்
சமூகத்தையும்
பாதுக்காப்போமே..!

இறைவனால் படைக்கப்பட்ட
உயிர்கள்
அநாவசிய ஆடம்பரத்தால்
அழிவதேனோ?
முடிந்தவரை கடன் தவிர்ப்போம்..!
வாழ்வையும் அழகாய்
வாழ்ந்து முடிப்போம்..!!



ஜெ.செந்துஜா



(நன்றி: சுகேசன் கேதீஸ்வரன்)

# வரலாற்றை அறிவோம்

உலகின் மிகப் பெரிய இந்து ஆலயம் கம்போடியா நாட்டில் உள்ள அங்கோர் வாட் ஆகும். உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களிலேயே மிகப் பெரியதும் இது தான். இதை கட்டியது ஒரு தமிழ் மன்னன் என்பது தான் ஒரு ஆச்சர்யமான தகவல். ஆம் அவர்தான் இரண்டாம் சூரியவர்மன். ஒரு போரின் மூலம் இந்த இடத்தை கைப்பற்றிய சூரியவர்மன் இந்த ஆலயத்தை கட்டினார்.

இந்த கோவிலானது சுமார் 200 ஹெக்டேர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றிலும் அகழியால் சூழப்பெற்றது. இந்த ஆலயத்தின் ஒரு பக்க சுற்று சுவரே சுமார் 3.6 கிலோமீட்டர் நீளம் கொண்டது என்றால் அதன் பிரமாண்டத்தை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இது வரை நம் தமிழர்களின் சாதனைகள் பற்றி நான் தெரிவித்திருந்த தகவல்களிலேயே மிக சிறந்த ஒன்று இது! இந்த அதிசயத்தைப் நம் மக்களுடன் பகிர்ந்துக்கொள்ள நான் பெருமையடைகிறேன். ஆம் உலகிலேயே மிகப்பெரிய வழிப்பாட்டு தளம் கம்போடியா நாட்டில் நம் கலைத்திறமையை உலகிற்கே காட்டிய அங்கோர் வாட் கோயில்.



பன்னிரெண்டாம் நூற்றாண்டில் சூரியவர்மனால் துவங்கப்பட்ட இதன் கட்டிட பணிகளானது 27 வருடங்களில் நிறைவு பெற்றது. கட்டி முடித்த சிறிது காலத்திலேயே இரண்டாம் சூரியவர்மன் இறந்தார். பின்பு ஆறாம் ஜெயவர்மன் ஆட்சிக்கு வந்த பிறகு புத்த கோயிலாக மாறிய இந்த ஆலயம் இன்று வரை புத்த ஆலயமாகவே விளங்கிவருகிறது.

அடர்ந்த காட்டிற்கு நடுவே இந்த கோவில் அமைந்திருப்பதினால் பதினாறாம் நூற்றாண்டுகளில் மக்களால் புறக்கணிக்கப்பட்டு சிதிலமடைந்தது. பிறகு ஒரு போர்சுகீசிய துறவியினால் மீண்டும் வெளியுலகிற்கு வந்தது. இந்த ஆலயத்தை சிறப்பிக்கும் வகையில் கம்போடிய நாட்டு அரசு கம்போடிய தேயசியக் கொடியில் தேசிய சின்னமாக அங்கோர் வாட் ஐ பொறித்துள்ளது. எந்த ஒரு காமிராவிலும் இந்த ஆலயத்தை முழுமையாக படம் பிடிக்க முடியாது. மேலே உள்ள புகைப்படமானது பூமியில் இருந்து 1000 அடி மேலே வானத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

இரண்டாம் சூர்யவர்மன் இந்த இடத்தை கைப்பற்றியவுடன் இந்த பிரம்மாண்ட கோயிலை இங்கு கட்டினான். இந்த இடம் தான் அவனின் தலை நகரமாக செயப்பட்டது. ஒரு பெருமையான விஷயம் சொல்லாட்டுமா?, வைணவத் தளமான இந்த கோயிலானது தான் இன்று வரை உலகில் கட்டப்பட்ட வழிபாட்டுத்தலங்களிலேயே பெரியது!!

இந்த கோயிலை ஒரு கலை பொக்கிஷம் என்றே கூறலாம், திரும்பிய திசை எல்லாம் சிற்பங்களை வடித்துள்ளனர். இந்த கோயிலின் ஒரு பக்க சுற்று சுவரே 3.6 கிலோமீட்டர்கள் !!! அப்படி என்றால் இந்த கோயில் எவ்வளவு பிரம்மாண்டமாக கட்டபட்டிருக்கும் என்பதை கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்.[ மீண்டும் ஒரு முறை] , இதன் சுற்றி சுவர் மட்டுமே 3.6 கிலோமீட்டர்கள் !!!

இந்த கோயிலின் ஆரம்பக்கட்ட வடிவமைக்கும் பணிகளானது பனிரெண்டாம் நூற்றாண்டின் முதலாம் பாதியில் தொடங்கியது. இருபத்தி ஏழு வருடங்கள் இந்த இடத்தை ஆண்ட சூர்யவர்மன் இறக்கும் சில ஆண்டுகள் முன்பு இதன் வேலைகள் நிறைவடைந்தது. இதன் பின்னர் ஆறாம் ஜெயவர்மன் கைக்கு மாறியது. பின்னர் இந்த கோயில் கொஞ்சம் கொஞ்சமாக புத்த வழிபாடுத் தளமாக

# வரலாற்றை அறிவோம்

மாற்றப்பட்டு. இன்று வரை இது புத்த வழிபாட்டுத் தளமாகவே செயல் பட்டு வருகின்றது!.

பதினாறாம் நூறாண்டிற்கு பிறகு இந்த கட்டிடம் சிறிது சிறிதாக புறக் கணிக்கப்பட்டது , அடர்ந்த காட்டுக்குள் இது கட்டப்படதனால் இது யார் கண்ணிற்கும் படாமல் சிதலமடயத் தொடங்கியது. பின்னர் 1586 ஆம் ஆண்டு Ant2nio da Madalena என்ற போர்சுகீசிய துறவியின் கண்ணில் பட்டது, அதை அவர் is of such extraordinary construction that it is not possible to describe it with a pen, particularly since it is like no other building in the world. It has towers and decoration and all the refinements which the human genius can conceive of. என்று கூறியுள்ளார்.

பின்னர் Henri Mouhot என்ற பிரெஞ்சு எழுத்தாளர் தன் புத்தகத்தில் இந்த கோயிலின் சிறப்பை வெளியிட்டவுடன் தான் இதன் புகழ் உலகம் முழுக்கும் பரவத்தொடங்கியது. அவர் அந்த புத்தகத்தில் One of these temples&a rival to that of Solomon, and erected by some ancient Michelangelo&might take an honourable place beside our most beautiful buildings. It is grander than anything left to us by Greece or Rome, and presents a sad contrast to the state of barbarism in which the nation is now plunged என்று குறிப்பிட்டுள்ளார்!!

பின்னர் இங்கு ஆய்வு பணிகளை மேற்கொண்ட பிறகு தான் இது நாம் கட்டியது என்று தெரியவந்தது!!

இன்றைக்கு இருக்ககூடிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கட்டினால் கூட, இப்போதைக்கு இது போன்ற ஒரு கட்டிடம் கட்ட 300 ஆண்டுகள் ஆகும் என ஒரு பொறியாளர் கூறி உள்ளார். ஆனால் எந்த தொழில் நுட்பமும் இல்லாத அந்த காலத்தில் வெறும் 40 ஆண்டுகளில் இது கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இதில் இன்னொரு சிறப்பு கம்போடிய நாட்டு தேசியக்கொடியில் நம் தமிழர்கள் கட்டிய இந்த கோயில் தான் தேசிய சின்னமாகஆட்சிப் பொறுப்பு பொறிக்கப்பட்டுள்ளது!.

இதை பற்றி எழுத சொன்னால் இந்த நாள் முழுவதும் இதன் சிறப் புகளை வரிசை படுத்திக்கொண்டே இருக்கலாம், கடைசியாக ஒன்று இந்த 2012 வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பம் வாய்ந்த ஒரு கேமராவில் கூட இன்று வரை இதன் முழு கட்டிடத்தையும் படம் பிடிக்க முடியவில்லை!! வானத்தில் 1000 அடிக்கு மேல் விமானத்தில் இருந்து எடுத்தால் மட்டுமே இதன் முழு கட்டிடமும் பதிவாகின்றது!! இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த இடத்தை பற்றி எத்தனை பேருக்கு தெரியும் என்பது தெரியவில்லை! குறிப்பாக இது நம் தமிழ் மன்னன் கட்டினான் என்பது எத்தனை தமிழர்களுக்கு தெரியும் என்பதும் கேள்விக்குறியே!!

இன்றும் தாய்லாந்தில் மன்னர், ஆட்சிப் பொறுப்பு ஏற்பதற்கு முன் நமது திருப்பாவையை தாம் பாராயணம் செய்து பின்னர் பதவி ஏற்பதுதான் வழக்கத்தில் உள்ளது.





# அன்னை!!

மொழிகள் தோன்றும் முன்னே
முதலில்
தோன்றிய முதல் வார்த்தை.
அவளின்றி பிறப்பதில்லை
எந்த உயிர்களும்!

கடவுள் பிறப்பதில்லை,
தோன்றுவார்கள்..
அவதரிப்பார்கள்.
என்றல்லவா அறிந்திருக்கிறோம்!!
முதன்முதலில் பிறந்த
ஒரே கடவுள் அவளே!

கருவிலே சுமந்தாள்!
தூக்கத்தை தொலைத்தாள்!
குருதியை உணவாக்கினாள்!
உன் கனவுகளை
அவளுடையது ஆக்கினாள்!

ஐயிரண்டு திங்களாய்
சுமந்த குழந்தையின்
அழுகுரல்
பூமியை முத்தமிடும்போது - மீண்டும்
ஒரு தாய் பிறக்கிறாள்!!

அன்னையில்லா உயிர்களும் இல்லை!
வேர்கள் இல்லா மரங்களும் இல்லை!
முதியோர் இல்லங்களுக்கு
மூடுவிழா எடுத்து.
அன்னை தந்தையை
அரவணைப்போம்!
ஆயுள் முழுவதும்!!

முல்லை பாஸ்கர்

ஊக்கமூட்டும் கதை!

# அவமானங்களை இவ்வளவு அழகாய் எதிர்கொள்ள முடியுமா?

ஆபிரஹாம் லிங்கனின் தந்தை ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. ஆனால் தமது உழைப்பாலும் முயற்சியாலும் அமெரிக்க ஜனாதிபதியானார் லிங்கன். அவரை அவமானப்படுத்தும் எண்ணத்துடன் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் ஒருவர் பேசினார்.

மிஸ்டர் லிங்கன், உங்களை இங்கு பலர் பாராட்டிப் பேசினார்கள். அது குறித்து நீங்கள் மகிழ்ந்துவிட வேண்டாம். உங்கள் பழைமை, வறுமை குறித்து நான் நினைவூட்ட வேண்டும். உங்கள் அப்பா தைத்துக் கொடுத்த ஷூ இன்னும் என் காலில் இருக்கிறது. ஞாபகம் இருக்கட்டும்.

என்று லிங்கன் தந்தை செருப்புத் தைப்பவர் என்று குத்திக் காட்டினார் அவர்.

ஆபிரஹாம் லிங்கனோ பதற்றப்படாமல்,


நண்பரே! என் தந்தை மறைந்து பலகாலம் ஆயிற்று. ஆனால் அவர் தைத்துக் கொடுத்த காலணி இன்னும் உங்களிடம் உழைக்கிறது என்றால் என்ன பொருள்? அவர் எவ்வளவு சிறந்த தொழிலாளி என்பது தெரிகிறது அல்லவா? அப்படி ஒரு சிறந்த தொழிலாளியின் மகனாகப் பிறந்தது குறித்து நான் பெருமை அடைகிறேன். அது மட்டுமல்ல, இப்போது உம் செருப்பு கிழிந்து போனாலும் என்னிடம் கொடுங்கள். நான் அதைச் சரி செய்து தைத்துத் தருவேன். அந்தத் தொழிலையும் நான் நன்கு அறிவேன். என்று ஒரு போடு போட்டார்.

பதவியில் இருக்கும் போதும், அவமானப்படுத்திய நபர் மீது கொஞ்சமும் கோபம் கொள்ளாமல், தன் அதிகாரத்தையும் காட்டாமல் புத்திசாலித்தனமாக பணிவோடு பதில் அளித்தே அவமானப்படுத்தியவரின் மூக்கை உடைத்திருக்கிறார் லிங்கன். இந்தப் பக்குவமான மனதாலும் விடாமுயற்சியாலும்தான் பல தோல்விகளுக்குப் பின்னர் அமெரிக்காவின் ஜனாதிபதியாகி அடிமைத்தனத்திற்கு எதிராக குரல் கொடுத்தார் லிங்கன்.

இதைத் தான் கவிஞர் கண்ணதாசனும் ‘நிலை உயரும் போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்’ என்றார். இன்றும் பல உயிர்கள் வணங்குகின்றன.. லிங்கனை.....




ஆபிரஹாம் லிங்கன்



ஆபிரஹாம் லிங்கனின் தந்தை

திரை விமர்சனம்




# ‘வெந்து தணிந்தது காடு’

மிதயா கானவி

‘வெந்து தணிந்தது காடு’ இருட்டைப் பார்த்துப் பயந்து கொண்டிருக்காமல் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைத்திருக்கின்றார் ஈழத்து சினிமாவில் வளர்ந்து வரும் இளம் இயக்குநர் மதிசுதா அவர்கள்.

முயற்சி என்பது தேங்கிக் கிடக்கும் குட்டையல்ல, அது ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நதி என்பதன் எடுத்துக் காட்டாகவே மதிசுதாவினது இந்த முயற்சி வெற்றி பெற்றுள்ளது.

‘வெந்து தணிந்தது காடு’ என்ற இத் திரைப்படமானது அதிகளவான மக்களின் குழு முதலீட்டுப் பணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது 203 பேர் முதலீட்டாளர்களாக இணைந்துள்ளது என்பது ஈழத் திரைப்பட வரலாற்றில் தனிச் சிறப்பாகப் பார்க்கப் படுகின்றது.

ஈழப்போரின் வலிகளையும், வாழ்வியலையும் கூறும் இக்கதையை எழுதி இயக்கியவர் அந்த மண்ணில் வாழ்ந்து, இழப்புகளைக் கண்ணூடு கண்டு வலிகளை தொட்டுணர்ந்தவரான மதிசுதா என்பதால் காத்திரமான படைப்பாக வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை.

அதே போல் படக்குழுவில் பணியாற்றிய அனேகர் அங்கு வாழ்ந்தவர்களே எனவும் அறியமுடிகின்றது.

ஐ போனினால் உருவாக்கப்பட்ட ‘வெந்து தணிந்தது காடு’ திரைப்படமானது இதுவரை 16 நாடுகளில் 29 சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளதுடன் நேபாளத்தின் கலாசார சர்வதேச திரைப்பட விழாவில் (Nepal cultural International film Festival) விழாவில் Special mention category விருதைப் பெற்று திரையிடப்பட்டுள்ளதும் சிறப்பாகின்றது.






ஒரு காலத்தைத் தன் குரலால் பதிவாக்கிய ஈழத்தின் மூத்த பாடகியான பார்வதி சிவபாதம் அவர்கள் இப்படத்தின் முக்கிய பாத்திரமாக நடித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அவரின் இந்த நடிப்பிற்கு குணசித்திர நடிகை என்ற விருதும் பெற்றிருக்கின்றார்.

மதிசுதா இயக்குநர் மட்டுமின்றி சிறந்த நடிகராகவும் அறியப்பட்டவர்,

இதுவரை 16 இற்கும் மேற்பட்ட குறும்படங்களை இயக்கியும் நடித்தும் உள்ளார், சமூகத்திற்குச் சொல்லவேண்டிய கருத்துகளை நாசுக்காக, சுருக்கென்று, மனதைத் தொடும் நகைச்சுவையுடன் குறும்படமூடாகச் சொல்லும் திறன் படைத்தவர் இவர். இவரின் 'மிச்சக்காசு', 'வெடிமணியமும் இடியன் துவக்கும்' போன்றன இன்னமும் பலர் மனங்களில் நிழலாடுகின்றன.

குறும்படங்களிற்காக மட்டும் 26 விருதுகளைப் பெற்றிருக்கின்றார் இவர். நாடற்றவர்களின் கதைகளை நாம் சொன்னால் அன்றி வேறு யார் சொல்லப் போகின்றனர்....? எனவே மதிசுதாவினதும் படக்குழுவினரதும் 'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் வெற்றி பாராட்டுக்குரியது. ஆனாலும் பாராட்டுவதோடு மட்டும் நின்று விடாது, எங்களின் கதைகளும் எல்லோரும் விரும்பும் சினிமாக்கூடாக வெற்றிகரமாக வெளிவருவதற்கு நாமும் எமது ஆதரவினை வழங்க வேண்டும்.

இத் திரைப்படத்தின் முன்னோட்டத்தை மதிசுதாவின் தளத்தில் பார்வையிடலாம். பெப்ரவரி மாதம் இலங்கையிலும், பின்னர் வெளிநாடுகளிலும் திரைக்கு வரவிருக்கின்றது இத் திரைப்படம்.

ஆனாலும் தென்னிந்திய படங்களிற்கே திரையரங்குகளில் முன்னுரிமை அளிக்கப்படுவதால், திரையரங்கிற்கான வாடகைப் பணத்தை முன்கூட்டியே இலங்கையில் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் நுழைவுச் சீட்டுக்கள் முற்கூட்டியே விற்கப்பட்டே இத்திரைப்படத்தின் வெளியீட்டுக்கான பணம் சேகரிக்கப்படுகின்றது'

என்ற செய்தியை இயக்குநர் மதிசுதா பல நேர்காணல்களில் தெரிவித்திருக்கின்றார். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் enkada.events என்ற தளத்தில் நுழைவுச் சீட்டை முற்பதிவு செய்து கொள்ளலாம்.




# பாலா என்னும் பெருந்தகை!

*பட்டறிவு பெற்ற*
*அரசியல் ஆசான்*
*அண்ணன் பாலா*

*தனக்கென எதையும்*
*கொள்ளாத*
*கொள்கையாளன்!*

*வசதிகள் வாய்ப்புகள்*
*அத்தனையும் துறந்து,*
*கொண்ட கொள்கையுடன்*
*கானகத்திலும்.*
*குண்டு மாரி நடுவிலும்..*
*தங்ககம் கொண்டவர்!!*
*கரிகாலன் தலைமைக்கு*
*தோள் கொடுத்து*
*உற்ற துணையாக நின்றவர்,*

*அரசியலில் அட்டாவதானி*
*நகைச்சுவையோடு*
*நயம்படப் பேசுவார்*
*தூரநோக்கோடு*
*உண்மை நிலவரத்தை*
*உலகிற்கு சொல்லும்*
*வல்லமை கொண்டதொரு*
*பேச்சாளர்!*

*பேச்சுவார்த்தை மேடைகளைக்*
*கலங்கடித்த*
*ஒரு ராசதந்திரி..*
*எழுத்தாளர்,*
*மனித நேயம் மிக்கவர்!!*

*சொல்லச் சொல்ல*
*தொடர்ந்து கொண்டே போகும்*
*இவர் ஆற்றிய*
*அருஞ்செயல்கள்!!*
*காலமும் காலனும்*
*சேர்ந்து*
*கவர்ந்து சென்றதால்,*
*பேரிழப்பு கண்டது*
*எங்கள் இனம்.!!*

*தலை வணங்குகிறோம் ஐயா.!!*
*எங்கள்*
*மனச் சிறையில்*
*என்றும்*
*நீர் வதிவீர்!!*

கனல்



# பார்த்தீனியம் – பல்கிப் பெருகும் விசச்செடி

## பார்த்தீனியம் செடி – மனிதர்கள், விலங்குகள், சுற்றுச்சூழல் என்று அனைத்திற்கும் ஆபத்தானது.



எமது பிரதேசத்தில் பல்கிப் பெருகியுள்ள இந்த நச்சுத் செடியினை அழிக்கும் முயற்சியை எடுப்போம். பொது இடங்கள், வீதிகள், ஆலயங்கள், விவசாய நிலங்கள், மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் என, மிக வேகமாக பல்கிப் பெருகி வளர்ந்துள்ள இந்த நச்சுச் செடி மனிதனுக்கும், சூழலுக்கும் மற்றும் விலங்குகளுக்கும் மிக ஆபத்தானவை.

பார்த்தீனியம் பூண்டு, சீதேவியார் செங்கழுநீர் , செவ்வந்தி போன்ற தாவரங்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு செடி ஆகும். ஒன்றரை மீட்டர் உயரத்துக்கும் மேலாக வளரக் கூடியது. இச்செடியானது அதிக எண்ணிக்கையிலான பூக்களையும்,குறைந்த எடையுடைய விதைகளையும் உற்பத்தி செய்கிறது. அதன் விதைகள் குறைந்த எடை உள்ளதால் காற்றின் மூலம் மற்ற இடங்களுக்கு எளிதில் விரைவாகப் பரவுகிறது.

மேலும், பார்த்தீனிய விதைகள் முளைப்பதற்குத் தேவையான சூழ்நிலைகள் இல்லாத போது, சாதகமான சூழ்நிலை வரும் வரை 20 ஆண்டுகள் கூட உறக்கத்தில் கிடந்து முளைக்கக் கூடிய தன்மை வாய்ந்தவை. பார்த்தீனியம்– பார்த்தீனியன், அம்புரோசின்





போன்ற நச்சு வேதிப்பொருள்களைச் சுரக்கிறது. இந்த நச்சுப் பொருட்களிடம் தாக்குப் பிடிக்க முடியாமல் நமது தாவரவினங்கள் அழிந்து விடுகின்றன. அத்துடன் இவை மண்ணில் கசிய விடும் நச்சுப் பொருட்களின் மூலம் பயிர்களின் வளர்ச்சியை பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றன.

பார்த்தீனியம் செடிகள் பரவியுள்ள இடங்களில் அனைத்திலும் காற்றில் மிதக்கும் மகரந்தங்களில், பார்த்தீனியச் செடிகளின் மகரந்தங்கள் தான் அதிகம் உள்ளன. இம் மகரந்தங்களும் தம்மீது நச்சுப் பொருட்களை பூசி வைத்துள்ளன. இதனைச் சுவாசிப்பவர்கள் ‘ஆஸ்த்துமா’ நோயால் பாதிக்கப் படுகின்றனர்.

பார்த்தீனியம் செடியைத் தொடர்ச்சியாகத் தொடுபவர்களுக்கு தோலில் அரிப்பு, தடிப்பு ஏற்படுகிறது. பார்த்தீனியச் செடிகள் கரியமில வாயுவை அதிகமாக வெளிவிடுவதால் சுற்றுச் சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துகிறன என்பதுடன் பார்த்தீனியம் செடிகள் பல்லுயிர்ப் பெருக்கத்தையும் அச்சுறுத்துகின்றன..

எமது மக்கள் இந்த கொடிய செடியின் தாக்கம் பற்றி நன்கறிந்து அவற்றை அழிக்கும் பணியில் ஈடுபட்டு, பயிர்களையும், கால் நடைகளையும், மனிதர்களையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்திட வேண்டும்.

ஒரு பார்த்தீனியச் செடி அதனுடைய வாழ்நாளில் 624 மில்லியன் மகரந்தத்தையும் 15,000 விதைகளையும் உற்பத்தி செய்யும் ஆற்றல் படைத்தது. பார்த்தீனியம் செடியில் உள்ள பார்த்தீனீன் மற்றும் அம்புரோசின் என்கிற நச்சுப்பொருட்களால் தோல் அரிப்பு, கொப்புளங்கள், எக்சிமா ஆகிய தோல் வியாதிகளும் கண்எரிச்சல், மூச்சுத் திணறல் மற்றும் ஆஸ்த்துமா உள்ளிட்ட வியாதிகளும் மனிதர்களுக்கு உண்டாகின்றன.

பார்த்தீனியத்தில் வெளிவரும் மகரந்த தூள் காற்றில் பரவி மனிதனை சென்றடையும் போது தோல் வீக்கம், நாசியழற்சி, சளிக் காய்ச்சல், கரும்புள்ளிகள், கண்ணை சுற்றி வீக்கம், கண் செந்நிறமாக மாறுதல் மற்றும் நுரையீரல் சம்பந்தமான நோய்கள் என்று பல கொடிய ஆபத்துக்களை உருவாக்குகின்றன.

கால்நடைகள் பார்த்தீனியத்தினை விரும்பி உண்பதில்லை. ஆனால், புல் மற்றும் தீவனம் கிடைக்காத காலங்களில் சிறு அளவு சாப்பிட நேர்ந்தாலும் இதனால் கால்நடைகளுக்கு அதிக அளவு உமிழ்நீர் சுரத்தல், வயிற்றுப்போக்கு, பசியின்மை, தோல் அரிப்பு, முடிகொட்டுதல், தோலில் திட்டு திட்டாக நிறம் மாறுதல் போன்ற பாதிப்புகள் அவற்றிற்கு ஏற்படுகின்றன.

எனவே, இந்த ஆபத்தான செடியினை அடையாளம் காண்போம். இந்த கொடிய செடியினை எமது பிரதேசத்தில் இருந்து அகற்றி எம்மையும் எம்மைச் சார்ந்த சூழலையும் பாதுகாப்போம்.

சமூகப் பெறுப்புடன் எல்லோருமாக இணைந்து முயற்சி செய்வோம்...! விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்!!



# இறந்து போன நாளொன்று...

படித்ததில் பிடித்த -
உன் வரிகள்
உன்னைப் படித்தபின்
அடங்கி போயிற்று!
இராப் பறவையின்
அவலக் குரலாய்...!

எனை
இனம் காணத் தவறிய
உன் விழிகள்
எமக்கான
உறவின்
விரிசல்களை
மௌனங்களாக்கின!

வெற்று வார்த்தைகளின்
சத்தமற்ற
ஒலிகள்..
சலசலக்கும்
ஓடைகளின்
ஓரங்களில்
செத்த பாசிச் செடிகளாய்
நாறும் கழிவுகளாய்,
இறந்த நாளொன்றின்
முடிவில்
கரையொதுங்கின!

உனைத்
தொலைத்துவிடத்
திராணியற்று
என்னுள் கரைகிறது
நீண்டு தொங்கும்
இரவுகளின் வெம்மை!
நெஞ்சுமையத்தில்
வெறுமையாய்...........

தேய்ந்து கொண்டிருந்த
நினைவுகளைத்
தூசுதட்டி
மீளவும்
துடைத்துப் பார்க்கின்றேன்,
நீயில்லாமல் போன
என்னைப் போலவே
அதுவும்.........!!

நிகழ்தகவுகளே
நிகழ்வுகள் ஆனதால்
உண்மைகளை
நியாயப்படுத்த
முடியாதவளாகி,
உன்
பார்வைகளை தற்செயலாக்கி,
நகரும் நாட்கள்
சொல்லிச் செல்லும்
இறந்துபோன
நாளொன்றின்
இயலாமைகளை...

மிதயா கானவி



# சே குவேரா

## அங்கம்: 01

கியூபா வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மாவீரன் சே குவேரா. இவர் 1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் ஆர்ஜென்டீனாவில் உள்ள ரொசாரியோ என்னும் இடத்தில் ஏர்னெஸ்டோ குவேரா லின்ஞ், சிசிலியா டெ ல செர்னா தம்பதியர்களுக்கு முதல் மகனாக பிறந்தார். அவர்கள் தங்களுக்குப் பிறந்த தலைப்பிள்ளையை முத்தமிட்டு மகிழ்ந்தனர். அளவற்ற மகிழ்ச்சிக்கு அடையாளமாக, தங்களது பெயர்களின் பாதியை இணைத்து 'ஏர்னெஸ்டோ குவேரா டி ல செர்னா' என பெயர் சூட்டினர்.



தனது மகனுக்கு வரலாற்றில் வேறு பெயர் பதிவு செய்யப்படும் என்று அப்போது குவேரா தம்பதிக்கு தெரிந்திருக்கவில்லை. 'சே' யிற்கு குறையற்ற விதத்தில் குழந்தைப் பருவம் அமைந்தது. சொந்தமாக மூலிகை தேயிலை பண்ணை இருக்குமளவுக்கு வளமாயிருந்தது ஏர்னெஸ்டோவின் குடும்பம்.

அப்போது 'சே' யிற்கு இரண்டு வயது இருக்கும். நீச்சல் ஈடுபாடு கொண்ட அவரது தாய், ஒரு குளிர் காலைப்பொழுதில் நதிக்கு தன் குழந்தையை அழைத்துச் சென்றார். நடுக்கமூட்டும் குளிர் நதியில் தன் குழந்தையை அவர் நீராட வைத்தார். ஈர உடையில் கிடுகிடுத்துக் கிடந்த குழந்தை 'சே' யின் நுரையீரலை நிமோனியா நோய் தாக்கி, ஆஸ்துமா அவரை இறுகப்பற்றியது. பின்னாளில், வாழ்க்கை முழுவதும் இவரைப் பாதித்த ஆஸ்மா நோய் இவருக்கு இருந்தும், இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக விளங்கினார்.

இவர் ஒரு சிறந்த ரக்பி விளையாட்டு வீரர். ஆடுகளத்தில் பின்னிருந்து ஆடும் தடுப்பாட்டக்காரனின் நிலையிலேயே பெரும்பாலும் விளையாடுவார். இவரது தாக்குதல் பாணி விளையாட்டு காரணமாக இவரை பூசெர் என்னும் பட்டப் பெயர் இட்டு அழைத்



தனர். அத்துடன், மிக அரிதாகவே இவர் குளிப்பதால், இவருக்கு பன்றி என்னும் பொருளுடைய சாங்கோ என்ற பட்டப்பெயரும் உண்டு.

தனது தந்தையிடமிருந்து சதுரங்கம் விளையாடப் பழகிய சே குவேரா, பன்னிரெண்டாவது வயதில் உள்ளூர் சுற்றுப் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளார். ரக்பியும் அவருக்குப் பிடித்தமான மற்றொரு விளையாட்டான சதுரங்கமும், எதிரிகளை வீழ்த்தும் தந்திரங்களைக் கொண்டு இருந்தது ஆச்சர்யமான ஒன்று. பிற்காலத்தில் போர்க்களத்துக்குத் தேவையான மன இயக்கத்தை, சிறுவயதிலிருந்தே அவருக்கே தெரியாமல் அவருக்கான சூழல்கள் உருவாக்கித் தந்திருக்கின்றன.

வாழ்நாள் முழுவதும் 'சே' கவிதைகளின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். அப்போதே கவிதை எழுதுவதில் ஆர்வமுடையவராக இருந்தார். வளரிளம் பருவத்தில் பாப்லோ நெருடாவின் வார்த்தை அலைகள், 'சே'வின் இதயத்தை மிகவும் பரவசப் படுத்தின. நெருடாவின் பெரும்பாலான கவிதைகளை மனப்பாடமாக ஒப்பிக்கும் அளவுக்கு ஈடுபாடு கொண்டிருந்தார்.

குவேராவின் வீட்டில் 3000 நூல்களுக்கு மேல் இருந்தன. நூல்களை வாசிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு இது ஒரு காரணம் எனலாம். இவற்றுள், கார்ல் மார்க்ஸ், போல்க்னர், வேர்னே போன்றவர்கள் எழுதிய நூல்களில் அவருக்குச் சிறப்பான ஆர்வம் இருந்தது. இவை தவிர ஜவஹர்லால்

# சே குவேரா



நேரு, லெனின் போன்றவர்களது நூல்களையும், பிரான்ஸ், ஏங்கெல்ஸ், வெல்ஸ், புரொஸ்ட் ஆகியோருடைய நூல்களையும் அவர் விரும்பி வாசித்தார். வாசிப்பதோடு மட்டும் நின்று விடாமல், எழுத்தாளராக வேண்டும் என்ற கனவு அவரிடம் கனன்று கொண்டு இருந்ததால், தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் தொகுப்பாக்கி, பின் பகுத்துப் பார்க்கும் தன்மையும் அவரிடம் இருந்தது.

அவரது வயது அதிகரித்த போது, அவருக்கு இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களான குயிரோகா, அலெக்ரியா, இக்காசா, டாரியோ, ஆஸ்டூரியாஸ் போன்றோருடைய ஆக்கங்களின் பால் ஈடுபாடு ஏற்பட்டது. செல்வாக்கு மிக்க தனி நபர்களின் கருத்துருக்கள், வரைவிலக்கணங்கள், மெய்யியற் கருத்துக்கள் போன்றவற்றை எழுதிவந்த குறிப்புப் புத்தகத்தில் இவர்களுடைய கருத்துக்களையும் அவர் குறித்து வந்தார். இவற்றுள், புத்தர் , அரிஸ்டாட்டில் என்போர் பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள், பேட்ரண்ட் ரஸ்ஸலின் அன்பு, தேசபக்தி என்பன குறித்த ஆய்வு, ஜாக் லண்டனின் சமூகம் பற்றிய கருத்துக்கள், நீட்சேயின் இறப்பு பற்றிய எண்ணங்கள் என்பனவும் அடங்கியிருந்தன. சிக்மண்ட் பிராய்



டின் ஆக்கங்களாலும் கவரப்பட்ட சே குவேரா, அவரைப் பல வேளைகளில் மேற்கோள் காட்டியுள்ளார்.

1948 ஆம் ஆண்டில் மருத்துவம் படிப்பதற்காக சேகுவேரா, 'புவனஸ் அயர்ஸ்' பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால் 1951 ஆம் ஆண்டில் படிப்பில் இருந்து ஓராண்டு விடுப்பு எடுத்துக்கொண்டு, அவரது நண்பரான ஆல்பர்ட்டோ கிரெனாடோவுடன் சேர்ந்து கொண்டு, மோட்டார் ஈருளியில் தென்னமெரிக்கா முழுதும் பயணம் செய்தார். அப்போது தென் அமெரிக்கா முழுக்கத் தொழுநோய் பீடித்திருந்தது. அது குறித்து ஆய்வு செய்யவும், அதற்குத் தங்களால் எதுவும் மருந்து கண்டுபிடிக்க முடியுமா என்ற தேடலுமே அந்தப் பயணத்துக்கான ஆரம்பம்.

பெரு நாட்டில் அமேசான் ஆற்றங்கரையில் இருந்த தொழுநோயாளர் குடியேற்றம் ஒன்றில் சில வாரங்கள் தொண்டு செய்வது அவரது இப் பயணத்தின் இறுதி நோக்கமாகவும் இருந்தது. தொழுநோயாளிகளின் தங்குமிடங்களைத் தேடித் தேடிச்சென்று, அவர்களின் தோளில் கை போட்டு உண்டு, உறங்கி, கால் பந்தாடிய 'சே'வின் உள்ளத்தில் பலவிதமான போராட்டங்கள் எழுந்தன. தொழு நோயாளர்களிடம் அவர் காட்டிய பரிவு மற்ற மனிதர்களிடம் இருந்து அவரை தனியாகப் பிரித்துக் காட்டியது.

இப்பயணத்தின் போது அவர் எடுத்த குறிப்புக்களைப் பயன்படுத்தி மோட்டார் ஈருருளிக் குறிப்புக்கள் என்னும் தலைப்பில் உடன் பயணித்த கிரனாடோ புத்தகம் எழுதினார். இந்தப் புத்தகம் உலகப் பிரபல்யம் பெற்றது. இந்த புத்தகத்தை அடிப்படையாக வைத்து, பின்னர் 2004 இல், இதே பெயரில் எடுக்கப்பட்ட திரைப்படம் விருதுகளையும் பெற்றது.

சேவின் வாழ்வை முழுவதுமாக புரட்டிப் போட்ட பயணம் அது. இதுவரையும் அவரின் மேல், புரட்சியின் எந்த சிறு நிழலும் விழுந்திருக்கவில்லை. புத்தக வாசிப்பு, நண்பர்கள், விளையாட்டு என அவரது உலகம் உல்லாசமாக இருந்தது. ஆனால் இந்தப் பயணம் அவருக்கு பல படிப்பினைகளை தந்தது. தென் அமெரிக்கக் கண்டம் முழுவதும் மக்களின் ஏழ்மை, பிணி, அறியாமை, அடக்குமுறை, வாக்குரிமைப் பறிப்பு, வர்க்க வேறுபாடுகளுக்குக் காரணமாக அமெரிக்காவும் அவர்களது சி.ஐ.ஏ. உளவு நிறுவனமும் செயல்படுவதை அறிந்தார். லத்தீன் அமெரிக்க நாடுகளில் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அனைத்துக்கும் வாஷிங்டனும் அதன் முதலாளித்துவமும் மட்டுமே காரணமாகக் கண்டறிந்தார்.

இந்த பிரச்சனைகளுக்கு தீர்வாக மார்க்சியம் [Marxism] அவர் சிந்தனையில் தோன்றியது. மார்க்சியம் என்றால் மார்க்சியம் என்பது கார்ல் மார்க்கஸ் போன்ற மேய்யியலாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை ஆகும். மார்க்சியம் என்பது கார்ல் மார்க்ஸ், மற்றும் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் ஆகிய மெய்யியலாளர்களின் ஆய்வுகள், எழுத்துக்கள் போன்றவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் உலகப் பார்வை ஆகும். மார்க்சியம், பொருளியல், அரசியல், மெய்யியல் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. அடிப்படையில் மார்க்சியமானது, இயங்கியல் பொருள் முதல்வாத கருத்தியலின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட மெய்யியலாகும்.

மெய்யியல்கள் எல்லாம் உலகை விளக்குவதையே தமது தன்மையாக கொண்டிருக்க, புரட்சி மூலம் உலகை மாற்றியமைப்பது பற்றிப் பேசுவதால், மார்க்சியம் உலகில் நிகழும் பல்வேறு போராட்டங்களுக்கும் புரட்சிகளுக்கும் அடிப்படைச் சித்தாந்தமாக அமைகிறது. இதனை பொது உடமை என்றும் வரையறுக்கின்றார்கள்.

இலகுவாக சொல்வது என்றால் சமவுடமை [சோசலிசம்], பொருளாதார நிர்வாகத்தில் கூடிய அரச பங்களிப்பை வலியுறுத்துகின்றது. முக்கிய துறைகள் அரசுடமையாக இருப்பதையும், சமத்துவத்தை அல்லது சம வாய்ப்புக்களை நிலை நிறுத்தும் கொள்கைகளையும், பொது பொருளாதார நீரோட்டத்தின் விளிம்பில் வாழும் மக்களின் வாழ்க்கை தர உயர்வுக்கு உதவும் வழிமுறைகளையும் வலியுறுத்துகின்றது. மேலும், சோசலிச சிந்தனைகள் பொது நலம், கூட்டு செயற்பாடு ஆகிவற்றை





# சே குவேரா

முன்னிறுத்தி அமைகின்றன. பொதுவுடமை அல்லது கம்யூனிசம் வர்க்கமற்ற (பாகுபாடற்ற) சமுதாயத்தை அமைப்பதற்கு தேவையான கோட்பாடுகள் கொண்ட தத்துவம் ஆகும். ஏகாதிபத்திய, முதலாளித்துவ தத்துவங்களின் குறைபாடுகளுக்கான ஒரு தீர்வாகும்.

இந்தகொள்கை தொடர்பான அறிவு சேவிற்கு வரக் காரணம் நூல்கள் மட்டுமல்ல. இவரது குடும்பம் இடதுசாரி சார்பான குடும்பமாக இருந்ததால், மிக இளம் வயதிலேயே மார்க்சியம் தொடர்பான பரந்த நோக்கு இவருக்குக் கிடைத்தது. இவரது தந்தை, சோசலிசத்தினதும், ஜுவான் பெரோனினதும் ஆதரவாளராக இருந்தார். இதனால், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட குடியரசு வாதிகள் இவர் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. இது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது.

இறுதியாக 1952, ஜூலை மாதம் அந்த பயணம் முடிவுக்கு வந்தபோது, 'சே' முழுவதுமாக மாறியிருந்தார். இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல், ஒட்டு மொத்தமான கண்டம் தழுவிய விடுதலைப் போர் முறை தேவைப்படும் ஒரே பகுதியாகப் பார்த்தார். எல்லைகளற்ற ஹிஸ்பானிய அமெரிக்கா என்னும் 'சே' குவேராவின் கருத்துரு அவரது பிற்காலப் புரட்சி நடவடிக்கைகளில் தெளிவாக வெளிப்பட்டது. ஆர்ஜென்டீனாவுக்குத் திரும்பிய சேகுவேரா தனது படிப்பை முடித்து 1953 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மருத்துவ டிப்ளோமாப் பட்டம் பெற்றார்.

1953 ஜூலையில் ஆண்டு மருத்துவப் பட்டம் பெற்றதும் அங்கிருக்கப் பிடிக்காமல், மீண்டும் பயணம் ஒன்றைத் தொடங்கிய சேகுவேரா, இம்முறை பொலிவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டூராஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

அதே ஆண்டு டிசம்பரில் சேகுவேரா குவாதமாலாவுக்குச் சென்றார். அங்கே மக்களாட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய குடியரசுத் தலைவர் ஜாக்கோபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவர் நிலச் சீர்திருத்தங்களின் மூலமும் பிற நடவடிக்கைகளாலும் பெருந்தோட்ட முறையை ஒழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார்.

உண்மையான புரட்சியாளனாக ஆவதற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் குவேரா, குவாத்தமாலாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார். ஏற்கெனவே அவருக்குள் உருவாகியிருந்த அமெரிக்கா மீதான கோபத்தை குவேதமாலாவின் அரசியல் சூழல் அதிகப்படுத்தியது. குவேதமாலா கம்யூனிஸ்ட் ஆதரவு அரசைக் கவிழ்க்க, அமெரிக்கா தன் சி.ஐ.ஏ. மூலமாக தீவிரமாகச் செயல்பட்ட தருணம் அது.

குவாத்தாமாலா நகரில், ஹில்டா கடேயா அக்கொஸ்தா என்னும் பெண்ணின் பழக்கம் கிடைத்தது. இவரையே பிற்காலத்தில் சே திருமணம் புரிந்தார். இவர் பெரு நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியலாளரும், இடதுசாரிச் சார்புள்ள அமெரிக்க மக்கள் புரட்சிகர கூட்டமைப்பு என்னும் இயக்கத்தின் உறுப்பினரும் ஆவார். இதனால் அவருக்கு அரசியல் மட்டத்தில் நல்ல தொடர்புகள் இருந்தன. இவர் ஆர்பென்சின் அரசாங்கத்தின் பல உயரதிகாரிகளைச் சேகுவேராவுக்கு அறிமுகப்படுத்தினார். அத்துடன் பிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களுடனும், கியூபாவைவிட்டு வெளியேறி வாழ்ந்து வந்தவர்களுடனுமான தொடர்புகளும் சே குவேராவுக்குக் கிடைத்தன. இக்காலத்திலேயே சே என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. சே என்





பது நண்பர் அல்லது தோழர் என்னும் பொருள் கொண்ட ஆர்ஜெண்டீனச் சொல்லாகும்.

'சே', அங்கிருந்த கம்யூனிஸ்ட்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு, அமெரிக்காவுக்கு எதிரான வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார். ஆனால், அமெரிக்கா தனது எண்ணத்தைச் சுலபமாக நிறைவேற்றி, ஜேக்கப் அர்பான்சோ அரசைக் கவிழ்த்தது.

1954ம் ஆண்டு ஜூன் மாதம் குவாத்தாமாலாவை முற்றுகையிடும்போது தப்பியோடும் நிலை ஏற்பட்டு, மெக்ஸிகோவில் தஞ்சம் புகுந்த 'சே', நாடு கடத்தப்பட்ட கியூபா மக்களைச் சந்தித்தார். இக்காலகட்டங்களில் கம்யூனிஸ்ட்களிடம் நெருங்கிப் பழகிய 'சே', மார்க்ஸிய லெனினியப் பாதை தான் தனது பாதை என்பதை உணர்ந்தார். அது குறித்த ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டார்.

விவசாயிகளிடம் குவேதமாலா அரசு, ஆயுதங்களைக் கொடுத்துப் போராட்டத்தில் ஈடுபடச் செய்திருந்தால் அமெரிக்காவின் சதியை முறியடித்திருக்கலாம் எனும் பார்வையில், 'சே' கட்டுரைகள் எழுதினார். இதனால் சி.ஐ.ஏவின் பார்வைக்கு இலக்கானார். பாதுகாப்புக்காக அவர் அர்ஜென்டினா தூதரகத்தில் தங்க நேரிட்டது.

இச்சமயத்தில், அவரது எண்ணங்களால் ஒரு கியூபா போராளி வசீகரிக்கப்பட்டார். அவர் பெயர் நிக்கோலோபஸ். கியூபாவின் ஜனாதிபதியாக இருந்த பாடிஸ்ட்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஃபிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் ஒரு புரட்சி ஏற்படுத்திய 'ஜூலை 26' எனும் இயக்கம் அப்போதுதான் தோல்வியைச் சந்தித்திருந்தது.

தொடரும்...



# வலை

அங்கம்: 05



கொற்றவை

மனச் சோர்வும் உடற்சோர்வும் அழுத்த, மெதுவாக நடந்து வீட்டை அண்மித்தான் ஆனந்தன். வெளியே வந்து எட்டிப் பார்ப்பதும் உள்ளே போவதுமாக சாந்தி பரபரப்புடன் இருந்தது தூரத்திலிருந்தே தெரிந்தது.

‘‘வெள்ளனக் காலனப் போன மனிசன்... இருளுது இன்னும் காணேல்லையே எண்டு தவிச்சுப் போனன்..’’ ஆனந்தனைக் கண்டதும் நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் சாந்தி.

‘‘ஏதேனும் சாப்பிட்டனீங்களே அப்பா?.... ஏன் இவ்வளவு நேரம்?... ஏதும் பெரிய பிரச்சனையே...? சரமாரியான கேள்விக் கணைகள்.

‘‘ வேலையில அயத்துப் போனன். சீச்சீ. பெரிசா ஒண்டுமில்லை டானியல் அண்ணையின்ரை கடையில பின் கதவு உடைச்சு ஆரோ சாமானுகள் கொஞ்சம் எடுத்திட்டாங்கள். அதைக் கணக்குப் பாத்து கதவைச் சரிப்பண்ண நேரம் போச்சு....’’

வீட்டுக்கு வரும் வழியில் யோசித்து வைத்திருந்த பொய்யை சாந்தியை திரும்பிப் பார்க்காமல் சொன்னான் ஆனந்தன். சாந்தியிடம் பொய் சொன்னது மனதுக்கு உறுத்தலாக இருந்தது.

‘பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்’

வள்ளுவரின் வரிகளை ஞாபகப்படுத்தி மனதை அமைதிப்படுத்திக் கொண்டான் ஆனந்தன். சாந்தியின் பிரச்சனையே வேறு. உடனடியாக சாப்பாடு ஏதாவது கொடுத்து கணவனின் வயிற்றைக் குளிர்விக்க நினைத்தவள் அவனின் சஞ்சலம் மிக்க முகத்தைக் கவனிக்கத் தவறி விட்டாள்.

‘‘மரவள்ளிக் கிழங்குக் கறியும் மீன் தீயலும் இருக்கப்பா ... தண்ணி ஊத்தின சோறுதான். புழிஞ்சு கொணர்ந்தனான். ஊறுகாயும் இருக்கு...’’

தட்டு நிறைந்த சாப்பாடும் வாய் நிறைய ஊர்ப் புதினமுமாக அருகில் அமர்ந்த சாந்தி அன்றைய தினத்தில் தன் காதில் விழுந்த கதைகளை ஒன்று விடாமல் ஒப்பித்தாள். எதுவும் ஆனந்தனின் மனதில் பதியவில்லை. ஒப்புக்கு ‘ஊம்’ கொட்டியவன், சாப்பிட்ட கையுடன் நேரே

படுக்கையில் சரிந்தான்.


மணியடித்தாற் போல ஐந்து மணிக்கே விழிப்பு வந்து விட்டது. வெளியே, மாமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து அன்று செய்ய வேண்டியவற்றை முடிவெடுத்தான். அடித்துப் போட்டாற்போல் ஒரு நித்திரையின் பின் மனது தெளிவாக இருந்தது. முதலில் டானியல் அண்ணர் வீடு.... இன்றைக்கு மண்டிக்காரர் வேலைக்கும் வெள்ளனப் போக வேணும்.

சாந்தியின் ஆட்டுப் பால் தேத்தண்ணி தந்த புத்துணர்வுடன் சைக்கிளை எடுத்தவன்,

''மறந்திட்டன்..! டானியல் அண்ணையின்ரை பிள்ளை படிக்கிறாள் இல்லை எண்டு கவலைப்பட்டவர். இனி வெண்ணிலா அங்க போகவேண்டாம். இவளின்ர கவனமும் சிதறீடும்... அவரும் பிள்ளையின்ரை நட்புகளைக் கொஞ்சம் குறைக்கப் பாக்கிறார்....'' சாந்தியிடம் சொன்னபோது அருகில் நின்ற வெண்ணிலா மறுப்பேதும் சொல்லாமல் 'சரி' என்று தலையாட்டினாள். சந்தோசமாக அவள் தலையாட்டியது போல ஆனந்தனுக்குப் பட்டது.

டானியல் அண்ணர் வீடு வழமைக்குத் திரும்பாவிட்டாலும், மகளுக்கு முன்னால் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாமல் இயல்பாக இருக்க முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். ஆனந்தன் போனபோது கலா சோர்ந்து போய் கதிரையில் உட்கார்ந்திருந்தாள். ஆனந்தனைக் கண்டதும், ''வாங்கோ மாமா..'' என்றதிலிருந்து நேற்று நடந்த எதுவும் அவள் ஞாபகத்தில் இல்லை என்பது புரிந்தது.

தீர்மானித்தபடி, கலாவின் வெளித் தொடர்புகளை அவளுக்கே தெரியாமல் துண்டிப்பது என்றும், அவளின்





உடல் பலவீனத்துக்கு விற்றமின் ஊசி போடுவது என்ற பெயரில் போதைத் தடுப்பு மருந்துகளை வேணியின் உதவி மூலம் ஏற்றுவது என்றும் டானியலும் ஆனந்தனும் வேணியுடனும் பேசி முடிவு செய்தனர். 'இவற்றிலிருந்து கலாவை விடுவிக்க எவ்வளவு செலவு செய்யவும் தயார்' என்றார் டானியல் அண்ணர். ஆனால், இந்தப் பிரச்சனையின் வேரைக் கண்டுபிடித்து கருவறுக்காமல் விடமாட்டன் என்ற கங்கணத்துடன் இருந்தார் அவர்.

மண்டியில் எல்லாவற்றையும் கூர்மையாக அவதானித்தான் ஆனந்தன். பெரிதாக எந்த வித்தியாசமும் தெரியவில்லை. சைக்கிளில் பெட்டியைக் கட்டி கடைக்கு எடுத்துச் செல்லும்போதும் அவனின் சிந்தனையெல்லாம் இந்தப் பிரச்சனைக்கான தீர்வைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது. தலை பாரமாகக் கனத்தது. உடம்பு கணகணத்தது போல ஒரு உணர்வு. இத்தனை வருட சிறைவாசம், சித்திரவதை, அடி உதைக்குப் பிறகு இப்போதெல்லாம் அடிக்கடி காய்ச்சல் வந்து விடுகிறது.

தலைக்கு பற்று வைத்து விட்டாள் சாந்தி. இரண்டு பனடோலைப் போட்டுவிட்டு அயர்ந்து உறங்கிப்போனான் ஆனந்தன்.

வெட்ட வெளி. யாருமே இல்லாமல் தனியனாக நிற்கிறான் அவன். சுற்றிவரப் பிணங்கள் அதுவும் மிருகங்கள் கிழித்துப் போட்ட உடலங்கள்.. மேலே கழுகுகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. ஏதோவொரு பயம் மனதை அழுத்த, 'காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள்' என்று குரல் கொடுக்கிறான் அவன். அவனுடைய குரலே அவனுக்கு



மிக இளமையாகக் கேட்டது. குனிந்து தன்னைப் பார்த்தான் பத்துப் பன்னிரண்டு வயதில் குறுங்காற்சட்டையுடன் அவன் இருந்தான். 'எங்களைத்தான் இங்கே விதைத்து விட்டீர்களே..'! என்ற பதில் பூமிக்குள்ளிருந்து வெளிப்பட்டது.

வியர்த்து வடிய, திடுக்குற்றுக் கண்விழித்து எழுந்தான் ஆனந்தன். காய்ச்சல் விட்டிருந்தது. நேரம் அதிகாலையை எட்டிக் கொண்டிருந்தது.

என்ன ஒரு பயங்கரமான கனவு. எதை உணர்த்துவதற்கு இப்படி ஒரு கனவு? தொடர்ந்தும் இங்கு நடக்கும் பிரச்சனைகள் பற்றியே சதா எண்ணிக் கொண்டிருப்பதால் தான் இப்படியொரு கனவு வந்திருக்க வேண்டும். பிரச்சனைகளைத் தனித்தனியாகப் பார்க்காமல், ஏதோவொரு திட்டமிட்ட சதியில் முழு சமுதாயமும் சிக்கியிருப்பதாக எண்ணி ஒரு தீர்வைக் காண்பதுதான் சரியாகவிருக்கும். வதனியும் இதைப்பற்றி ஆனந்தனுடன் ஏற்கனவே கதைத்திருந்தா. 'சமுக முன்னேற்றமும் இளைய சமுதாயமும்' என்ற தலைப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட கொஞ்சப்பேருடன் ஒரு சந்திப்பிற்கு ஒழுங்கு செய்திருப்பதாக வதனி சொல்லியிருந்தது நினைவிற்கு வந்தது. காய்ச்சல் விட்டிருப்பதால் ஒருக்கா போய் வருவதுதான் நல்லது என்று வெளிக்கிட்டான்.

''ரா முழுக்க காச்சலில கிடந்து அனத்திக்கொண்டு கிடந்துட்டு இப்ப எங்கையப்பா வெளிக்கிடுறியள்? வேலைக்கே.? ஏலுமே.? நின்டிட்டு நாளைக்குப் போங்கோவன்...'' சாந்தியின் வேண்டுகோள் இது.

''இண்டைக்கு வேலை ஒண்டும் இல்லை... உதில ஒரு சின்னச் சந்திப்பு... வதனியும் வரச்சொன்னவா.... போட்டு வாறன்.... கெதியில வந்திடுவன்..''

கூட்டம் என்றதும் சாந்தியின் முகத்தில் கவலையின் கீறல்கள் தென்பட்டன.

''ஏதும் வில்லங்கமாக் கதைச்சுப் போடாதீங்கோ... பாத்து... நிதானமாக் கதையுங்கோ...' என்ன நடக்குது என்று தெரியாவிட்டாலும் அவள் கவலை அவளுக்கு.

கூட்டத்திற்கு கணிசமானளவு பெண்கள் வந்திருந்தது ஓரளவிற்கு மகிழ்ச்சியைத் தந்தது. சின்னதாக ஒரு சந்திப்பு என்றார்கள்.. பார்த்தால் அவ்வளவு சின்னக் கூட்டமாகத் தெரியவில்லை. ஊர் வாசிகசாலைத் தலைவர்கள், தனியார் கல்வி நிறுவனம் நடத்தும் சிலர், சமுக ஆர்வலர்கள், சில தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், கடை முதலாளிகள் சிலர் என்று பலதும் பத்துமான ஆட்கள் திரண்டிருந்தது உண்மையிலேயே நல்ல விசயம்தான்.

எடுத்தவுடனேயே கூட்டம் களைகட்டிவிட்டது. யாரோ ஒருவர் அண்மைக் காலங்களில் வந்த பத்திரிகைகளை எடுத்து முன்னால் போட்டார்.

''பேப்பரைப் பாருங்கோ... வேற ஏதும் செய்தி இருக்கோ... மது போதையில் தனது மூன்று வயதுக் குழந்தையை சீரழித்த தந்தை., போதைப்பழக்கத்திற்கு அடிமையான பதினைந்து வயதுச் சிறுமி கர்ப்பம், போதையில் வந்த அண்ணனால் பலாத்காரம் செய்யப்பட்ட தங்கை தூக்கிட்டுத் தற்கொலை,.... போதைவஸ்துக்களுடன் அகப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள்,.... போதையாளர்களால் பலாத்காரம் செய்யப்பட்ட மூதாட்டி மரணம்..... இப்படியான செய்தியைத் தவிர வேற ஏதும் இருக்கோ? இவ்வளவுக்கு மோசமாக எங்கடை இடம் எப்பிடி வந்துது....? இதுக்கு என்ன செய்யப் போறம்? வெளியில பிள்ளையள் வெளிக்கிட்டாலே இப்ப பயமாக் கிடக்கு....''

பலதரப்பட்ட கருத்துக்கள் அங்கே விவாதிக்கப்பட்டன. எல்லோருடைய கருத்துக்களையும் காதில் வாங்கி அவற்றைப் பற்றி ஆலோசனை செய்தது ஒரு நல்ல விடயம். எல்லோருடைய முகங்களிலும் விசனம் தெரிந்தது. இறுதியில், அவரவர் ஊர்களில் சந்தேகத்திற்கிடமான செயற்பாடுகள் தென்பட்டால் கண்டும் காணாமலும் விடாமல் முடியுமானவரை ஊர்மக்கள் முன் எடுத்துச் செல்வது என்று தீர்மானித்தனர். ஒவ்வொருவரும் தங்கள் பாதுகாப்பில் கவனமாக இருக்க வேண்டும் என்றும், வீடுகளில் பிள்ளைகளிடம் கொஞ்சம் கண்டிப்புடன் நடக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

ஆனந்தன் வெறும் பார்வையாளனாக மட்டும்தான் அங்கே இருந்தான். முடிவுகள் எடுக்கும்போது அவற்றை ஆமோதித்தது மட்டும்தான் அவனது வேலை. நீண்ட காலத்தின் பின் மக்கள் ஓரணியில் நின்றது என்பது சரியான பாதையில் தாங்கள் அடியெடுத்து வைப்பதான ஒரு உணர்வைத் தந்தது.

வெளியே அவனுக்காக வதனி காத்திருந்தா.



''உங்கடை இடத்தில பள்ளிக்குடப் பிள்ளையொண்டு திடீரென்று படிப்பை விட்டிட்டு முல்லைத்தீவுக்கு இடம்பெயர்ந்து போனது. அதுவும் சோதனை வாறதுக்கு கொஞ்சம் முதல். பிறகு அந்தப் பிள்ளை செத்திட்டுது எண்டு தகவல் கிடைச்சுது. கேள்விப்பட்டனீங்களோ...?''

ஏ எல் படிச்சுக் கொண்டிருந்த பிள்ளையொண்டுக்கு இப்படி நடந்ததை வெண்ணிலா வீட்ட வந்து சொன்னது ஞாபகம் வந்தது. அந்த நேரத்தில் தன்னுடைய பாடசாலைப் பிள்ளை இறந்த மனவருத்தம் வெண்ணிலாவுக்கு இருந்தது.

''ஏதும் வருத்தமோ...? இப்பெல்லாம் இள வயதிலயே எங்கடை பிள்ளைகள் போய்ச் சேருதுகள்'' இது ஆனந்தனின் பதில்.

'''ஐயோ அண்ணை..!! இதில என்னவோ பிரச்சனை இருக்கு. சித்தப்பாக்காரன் அடிச்சதில பிள்ளை செத்துப் போச்சுது எண்டு அங்கத்தைத் தகவல்... அதை மறைச்சு பொடியைத் தொங்க விட்டிருக்கிறாங்கள்... விசயம் என்னெண்டால் ஊருக்கே அரசல் புரசலாத் தெரிஞ்ச விசயம், காவல்துறைக்கும் தெரியும்... ஆனாலும் 'சூசைட்' எண்டு முடிச்சிருக்கினம்.... ஏன்? பிள்ளையை ஏன் ஊர் விட்டு ஊர் கொண்டு போனவை?''

''குடும்பம் ஏதும் பிரச்சனையில இருந்தாலும் இடம் மாறிப் போயிருக்கலாம்தானே.?''

''இல்லை! இல்லை..! தகப்பன் இங்க கடையில வேலை பார்த்தவர். ராவோட ராவா வேலையை விட்டிட்டார்.... தாய் சமைச்சுக் குடுக்கிறவா.... அடுத்த நாள் சாப்பாடு எடுக்க வரேக்கதான் ஆக்களுக்கு அவையள் அங்க இல்லை எண்டு தெரியும்.... பிள்ளை படிப்பில கெட்டிக்காரி.... சோதனைக்கு முதலே ஏன் போனவை?...''

ஆனந்தனுக்கு சட்டென்று எதுவோ மனதில் உறைத்தது. அதை உணர்ந்தவர் போல

''ஆ...! அங்கதான் என்ரை சந்தேகம். அந்தப் பள்ளிக்குடம் பற்றி சில விசயங்களும் நல்லா இல்லை. இதிலயும் பள்ளிக்கூடப் பிரச்சனை என்னவோ இருக்கோணும்...''

'இந்தத் தகவலை என்னெண்டு பார்த்தா டானியல் அண்ணரின்ரை பிள்ளையைக் காப்பாத்தலாமோ?'

''வாற கிழமை முல்லைத்தீவில அந்த ஏரியாவுக்கு கிட்ட எங்கடை கட்சி வேலைத்திட்டம் நடக்குது வேலைக்கு ஆக்கள் இங்கயிருந்துதான் கொண்டு போறம்.... உங்களுக்கும் இங்கை இப்ப வேலையள் எடுக்கிறது கஸ்டம்தானே? உங்களையும் சேர்க்கட்டோ....? எட்டுப்பத்து நாள் வேலை கிடைக்கிறதும் ஆகுது இதை சாடையா விசாரிக்கிறதும் ஆகுது....''

ஆனந்தனுக்கும் அது சரியென்றே பட்டது. மண்டிக்காரரும் வாற கிழமையில இருந்து பதினைஞ்சு நாள் இந்தியா போறார். அந்த நேரம் வேலை இருக்காது



என்று சொல்லியிருந்தவர். அந்த இடைவெளியில இந்த வேலையிருந்தால் சாப்பாட்டுக் கஸ்டம் இருக்காது.

பத்து நாள் முல்லைத்தீவில வேலை என்றதும் சாந்தி இடிந்து போய்விட்டாள். வெண்ணிலா கூட 'கட்டாயம் போகோணுமா? இன்னொரு தரம் நீங்கள் இப்பிடி இவ்வளவு தூரம் வேலைக்கு போகக்கூடாது அப்பா' என்று உத்தரவு போட்டுவிட்டாள்.

ஆயிரம் தடவைகள் 'பத்திரம்' சொல்லிவிட்டு வேலைக்குப் போகிறவர்களை ஏற்ற வந்த வாகனத்தில் ஏறினான் ஆனந்தன். மனது முல்லைத்தீவில் முதல்முதல் காலடி எடுத்துவைத்த நாளை அசைபோட ஆரம்பித்தது.

**தொடரும்...**



டாக்டர்.சி.சிவன்சுதன்
(பொது வைத்திய நிபுணர்)

# பனை: ஒரு கற்பக தரு!

பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால், பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.

இலகுவில் ஏமாறக்கூடிய மனம்படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்கா தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக் கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனைமரங்கள் பாவப்பட்ட எம்மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

பானங்களிலே அதிகூடிய புரதச் செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச்செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100g பாலிலே



**எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் ஐந்து வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப் படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.**

# பனை: ஒரு கற்பக தரு!



3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் மூன்று மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60% புரதமும் 30% மாப் பொருளும் இருப்பதுடன் மிகக்குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங் கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின் மகத்துவம் சொல்லிக் கொடுக்கப் படுவதில்லை.

எம்மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் ஐந்து வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப் படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்து நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம்பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக் கொண்டிருக்கின்றன.

பனம்பழங்களின் உலர்நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (யு) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுத்து பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின், நாம் பனம்பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸி லும் சிறந்த அதிக நார்த் தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம். பனங்கிழங்குகள் அதிகளவு நார்த் தன்மையும் மிகக் குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப் பதுடன் உலர்நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்றமின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக்க் காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங் கிழங்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளைப் பதப்படுத்தி பனங் கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறிமுறையும் கண்டறியப்பட வேண்டும்.












**சுனாமி காவுகொண்ட உறவுகளின் 18 ஆவது ஆண்டு நினைவு ...**









